பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 04 வெள்ளிக்கிழமை 20.08.2021 கதிர் 288

### இனிது ரகசியம் அல்ல!

வெறும் ஆரவாரம் செய்வதும் எடுப்பு அறிவிப்புகள் விடுப்பதும் மட்டும் அரசியலாகிவிடாது. அதையும் தாண்டி மக்களுக்கு ஏதாவது பிரயோசனமாகச் செய்யவேண்டும். அவற்றையும் கூட நேர்மையாக, ஊழல், மோசடி, லஞ்சலாவண்ணியம்

பக்கம்02 »

## நாளாந்தத் தொற்றாளர்கள் உச்சம்; நேற்று 3,793 பேருக்குக் கொரோனா

இலங்கையில் மேலும் 3 ஆயிரத்து 793 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம்காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் இது வரையில் அடையாளம் காணப்பட்ட மொத்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 73 ஆயிரத்து 152 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2,186 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 18, 714 ஆக உயர்வடைந்துள்ளது.

## ஒரே நாளில் 186 பேர் கொரோனாவால் பலி

இலங்கையில் மேலும் 186 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவே இதுவரை ஒரே நாளில் பதிவான அதிகூடிய கொரோனா மரணங்களின் எண்ணிக்கையாகும்.

இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனாச் ☞ 2

# இலங்கையில் கொரோனாத் தொற்று குறைவதற்கான அறிகுறியே இல்லை

### பெருமளவு நோயாளர்கள் சமூகத்தில் நடமாடுகின்றனர்; விசேட வைத்திய நிபுணர் ரவி ரன்னன் எலிய எச்சரிக்கை



இலங்கையில் கொரோனா வைரஸ் பெரும் சமூகத் தொற்றாக மாற்றடைந்துள்ளது. அத்துடன், தொற்று நோய் குறைவதற்கான அறிகுறிகளையே காண முடியவில்லை.

– இவ்வாறு சுகாதார கொள்கைகள் ஸ்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ரவி ரன்னன் எலிய தெரிவித்தார். ☞ 2

## புதிய அரசமைப்பு உருவாக்கம்; இனியும் தாமதிக்கப்படலாகாது



### கோட்டாவுக்கு சம்பந்தன் கடிதம்

புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் நடைமுறை இனியும் தாமதிக்கப்படலாகாது என்று தமிழ்த் தேசியத் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நடைமுறை இனியும் தாமதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இரா.சம்பந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெறவிருந்த ☞ 2

## 209 வைத்தியர்கள், 1,000 தாதியர்கள் கொரோனாவால் பாதிப்பு; 6 பேர் பலி

இலங்கையில் 209 மருத்துவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொற்றுக்குள்ளான மருத்துவர் களில் 30 – 40 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதுடன், ஒரு மருத்துவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்களில் கொழும்பு தேசிய மருத்துவமனையைச் சேர்ந்த 27 மருத்துவர்களும், ஹோமாகம மருத்துவமனையைச் சேர்ந்த 17 மருத்துவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இதனிடையே, 3 மருத்துவர்கள் இதுவரை கொரோனா வைரஸால் உயிரிழந்துள்ளனர் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் 1000 ☞ 2

## வவுனியா வைத்தியசாலையில் கொரோனாவால் பெண் மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றால் பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று மாவட்ட சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு கொரோனா சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த பெண்ணே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

அவரது உடலை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அடக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளைச் சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

## தொற்றாளருக்கு சிகிச்சை வழங்க புதிய நடைமுறை

மேல்மாகாணத்தில் கொரோனா நோயாளர்களை சிகிச்சை நிலையங்களுக்கு உட்படுத்தல் அல்லது வீட்டில் வைத்து சிகிச்சையளிப்பதற்காக நேற்று முதல் புதிய நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன.

புதிய முறைமைகளின் கீழ் தொலைபேசியினூடாக தகவல்களை வழங்குதல் குறுந்தகவல் ஊடாக அறிகுறிகள் குறித்து அறிவிக்க முடியும். ☞ 2

## யாழ்.மாவட்டத்தில் 68 பேர் உட்பட வடக்கில் 128 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 68 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 128 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 740 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய யாழ்.மாவட்டத்தில் பேர் 68 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 32 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 06 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 18 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வசாவிளான் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவரும் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## ‘பொது முடக்கம்’ தொடர்பில் கோட்டா இன்று விசேட உரை?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டு மக்களுக்கு இன்று விசேட உரையாற்றவுள்ளார் என அறியமுடிகின்றது.

இந்த உரையின்போது நாட்டை முடக்குவது தொடர்பிலும், முடக்கத்துக்கு மத்தியில் கடைபிடிக்கப்படும் நடைமுறைகள் தொடர்பில் ஜனாதிபதி தெளிவுபடுத்துவார் எனத் தெரியவருகின்றது.

நாட்டை குறைந்தபட்சம் இரு வாரங்களுக்காவது முடக்குமாறு மகாநாயக்க தேரர்கள், வைத்தியர்கள், சுகாதாரத் தரப்பினர், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், தொழிற்சங்க பிரமுகர்கள் உட்படப் பல தரப்பினரும் கோரிக்கை முன்வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் எதிர்வரும் நாள்களில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு?

கொழும்பு, ஓகஸ்ட் 20

இலங்கையில் எதிர்வரும் நாள்களில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை உருவாகியுள்ளது எனக் கனியவள தேசிய சேவையாளர்கள் சங்கத்தின் இணைப்பாளர் ஆனந்த பாலித்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறினார்.

தற்போது 11 நாள்களுக்குப் போதுமான டீசல் இருப்பில் உள்ளதுஎனவும், 10 நாள்களுக்கு போதுமான பெற்றோல் மாத்திரமே இருப்பில் உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இல்லாமல் செய்ய வேண்டும். குறைந்த பட்சம் ஊழல், மோசடி இல்லாமல்தான் காரியங்கள் நடக்கின்றன என்று மக்கள் நம்பும்படியாகச் செய்ய வேண்டும். அது கஷ்டமான காரியம்.

அதேசமயம், தாம் பதவிக்கு எப்படி வந்தோம், தமது பலம், பலவீனம் எத்தகையது – அதுவும் அரசியல் ரீதியாக எத்தகையது – என்பதை எல்லாம் உணர்ந்து செயற்பட வேண்டும். இல்லையேல் எந்த அதிகாரப் பதவியில் இருந்தாலும் தலைகுப்புற விழ வேண்டி நேரும்.

பல தரப்புகளுக்கும் இடையிலான முரண்பாட்டுக்கு மத்தியில் கிடைத்த அதிர்ஷ்டத்தில் யாழ்.மேயரானவர் சட்டத்தரணி வீ.மணிவண்ணன்.

இப்போது தான் பதவியைத் துறந்தால் சபையே கலைந்து விடும் சூழல் இருப்பதால், சபையின் உறுப்பினர்கள் எல்லோரும் தன்னைத் தாஜா செய்து அப்பதவியில் வைத்திருக்கவே விரும்புவார்கள், ஆகவே தான் ஏதும் செய்யலாம், எப்படியும் நடக்கலாம் என் எண்ணிக் கொண்டார் போலும்.

அதனால், அதிகம் துள்ளிக்குதித்தார். இன்னும் ஐந்தாறு, மாதங்கள்தாம் பதவிக் காலம். அதற்குள் சேர்ப்பதைச் சேர்த்து விடுவோம் என்று எண்ணுகிறார் போலும்.

தனக்கு அனுமதிக்கப்பட்ட கயிற்றின் நீள,அகலம் தெரியாமல் துள்ளிக் குதித்தவர் நேற்றுத்தான் அதை உணர்ந்திருப்பார் என்று நினைக்கின்றேன்.

யாழ்.மாநகர சபையில் மூன்று பிரதான கட்சிகள் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

மூன்றாவதில் நியமன உறுப்பினர் இவர். தாம் தெரிவான கட்சியைப் பிளந்தார்.

மற்றைய இரு தரப்புகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – ஈ.பி.டி.பி. முரண்பாட்டில் அரசியல் செய்தார்.

கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசின் தலைவர் மாவை சேனாதிராசாவின் முட்டாள்தனமான அரசியல் முடிவு அதிர்ஷ்டமாக அமைய, கூட்டமைப்புக்கு மாறான ஈ.பி.டி.பியின் தயவால் மேயர் பதவி – யானை மாலை போட்டதால் கிடைத்த ராணி பதவி மாதிரி – அதிர்ஷ்டத்தில் கிட்டியது.

பதவியை வைத்துக் கொண்டு சுழற்றி அள்ளுகின்றார் என்ற குற்றச்சாட்டுப் பரவலாகப் பரவியது. ஈ.பி.டி.பியிலும் முக்கிய உறுப்பினர் ஒருவர் தொழில் தோஸ்துக் காரணமாக ஒன்றிணைய ‘கூட்டு அள்ளல்’ கொடி கட்டிப் பறக்கத் தொடங்கியது.

உரிய தரப்புகள் ஈ.பி.டி.பி. தலைவரான அமைச்சருக்கு முன்னெச்சரிக்கை சங்கு ஊதின.

*“வரும் மாகாண சபைத் தேர்தலை தனித்துச் சந்தித்தால் இரண்டு, மூன்று ஆசனங்களை அள்ளலாம் என்று மேயர் திட்டமிடுகின்றார். உங்கள் தரப்பிலும் அவரது தொழில் தோஸ்து சேர்ந்து செயற்படுகின்றார். இப்போது சுருட்டி அள்ளி வைத்தால் வரும் தேர்தலில் ஒன்று சேர்ந்து தனி அணியாகக் களம் இறங்கலாம் எனத் திட்டமிடுகின்றார்கள் இருவரும். எச்சரிக்கையாக இருங்கள். ”* – என்று ஈ.பி.டி.பி. தலைவருக்கு அபாய ஒலி எழுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. அதனால் உஷாரடைந்தார் அமைச்சர்.

இதற்கிடையில் நகரப் பெயர்ப் பலகை நடுகையின் பெயரில் சுருட்ட எடுக்கப்பட்ட முயற்சி, விவகாரம் இடையில் பத்திரிகைகளில் அம்பலமாகி சர்ச்சையை உருவாக்க, மாநாகர சபையின் மாதாந்தக் கூட்டத்துக்கு முன்னர் அந்தத் திட்டத்தை ஆரம்பித்து நகர்த்தி விட மேயர் தரப்பு தலையால் கிடங்கு கிண்டியது. ஆனால் சரிவரவில்லை.

நேற்று சபையின் மாதாந்தக் கூட்டம். அதற்கு முதல்நாள் ஈ.பி.டி.பியின் உறுப்பினர்களைக் கூப்பிட்டு கூட்டம் வைத்தார் அமைச்சர் டக்ளஸ்.

*“ஊழல், மோசடிக்கு எங்கள் கட்சி துணைபோனது என்ற கெட்ட பெயரை வாங்காதீர்கள். அதனால் நாளைய கூட்டத்தில் பிரச்சனமாகி மேயருக்கு முதுகு கொடுக்கப் போகவேண்டாம். அவர் நல்லது செய்யவே அவரை மேயராக்க உதவினோம். அவரது தவறுகளுக்கு நாம் துணைபோக முடியாது, துணைபோகக் கூடாது. அவரது செயற்பாடுகள் சந்தேகத்துக்கு உரியனவாகி உள்ளன. இப்போது ‘கமா’ போடுவோம், கொஞ்சம் மோசமாக இருந்தால் கேள்விக்குறி போடுங்கள், அவர் திருந்தாவிட்டால் முற்றுப்புள்ளி வைக்கச் செய்யலாம். ”* – என்ற சாரப்பட மிக கடுமையாக உரைத்திருக்கின்றார் அமைச்சர் டக்ளஸ்.

அதனால், நேற்று மாநகர சபைக் கூட்டத்துக்கு மேயர் வந்து அமர்ந்ததுமே ஈ.பி.டி.பியினர் வெளிநடப்புச் செய்தனர். தாம் தனித்து மாட்டிக் கொண்டிருப்பதை ஆரம்பித்திலேயே உணர்ந்து கொண்டார் மேயர்.

நகரப் பெயர் பொறிக்கும் வளைவுகளை அமைக்கின்ற ஒப்பந்தத்தை, சபைக்கும் அதிகாரிகளுக்கும் தெரியாமல் – சத்தம் சந்தடியின்றி – தம்பாட்டில் முன்னெடுத்து, இடைவழியில் – குறுக்குப் பாதையில் – மேயர் லாபமீட்டியிருக்கின்றார் என்று போட்டுத் தாக்கி, விவரங்களை முன்வைத்தது கூட்டமைப்பு.

மற்றைய கட்சிகளின் முரண்பாடு என்ற மோதல் சூட்டில் அரசியல் குளிர் காய முயற்சித்த மேயருக்கு நேற்றைய கூட்டம் நல்ல சூடு போட்டிருக்கும் என்று நம்பலாம்.

அசைய விடாமல், ஆதாரங்களை அடுக்கியது கூட்டமைப்பு. கூட்டத்தை ஒரு மணிநேரம் ஒத்தி வைத்து, சாம,பேத,தான, தண்ட முறைகளில் நிலைமையைச் சமாளிக்க முயற்சித்துப் பார்த்தார் அவர். *“நான் இராஜினாமாச் செய்தால் சபை கலைந்து விடும். ஆகவே என்னை இராஜினாமாப் பண்ண வைக்காதீர்கள்”* – என்ற சாரப்பட ஒரு செய்தி அனுப்பிப் பார்த்தார். சம்பந்தப்பட்டோர் மசியவில்லை. *“விருப்பம் என்றால் இராஜினாமாச் செய்யட்டும். அப்படியாயினும் சபை ஊழல், மோசடி, லஞ்ச, லாவண்யத்தில் சிக்காமல் பார்க்கலாம் என்றால் நல்லது. சபை கலைந்துதான் ஊழல் மோசடிகளையும் லஞ்ச லாவண்யத்தை நிறுத்தலாம் என்றால் அதுவும் நல்லதுதான். ”* – என்று பதில் பிரதிபலிக்கப்பட்டதாம்.

வேறு வழியின்றி, முறைகேட்டுக்கு வழி செய்த வரவேற்பு வளைவு விடயத்தை விசாரித்து, ஆராய்ந்து, முடிவு எடுக்கும் வரை தள்ளி வைக்கும் தீர்மானத்துக்கு இணங்க வேண்டியவரானார் அவர்.

அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் பெரும்பாலான சபை உறுப்பினர்கள் நடையைக் கட்ட, நேற்று முதல் தடவையாக சபை கோரமின்றி இன்று பிற்பகல் வரை ஒத்தி வைக்கப்பட்டது.

பனைமரத்துக்குக்கீழ் இருந்துகொண்டு குடித்தபடி எந்த நாளும் பால் குடிப்பதாகக் கூறமுடியாது. மக்கள் நம்பமாட்டார்கள். நீதி, நியாயமான – ஊழல், மோசடியற்ற – நிர்வாகம் என்பது வெறும் வாய்சவடால் அல்ல. அதையும் தாண்டி செயலில் நிரூபித்துக் காட்டப்பட வேண்டியது. மக்களுக்கு சந்தேகம் ஏற்படாமல் நிரூபிக்கப்படவேண்டியது.

இந்தப் பெயர் பலகை வளைவு அமைக்கும் வேலை தொடர்பில் நடந்தது என்ன? தனி விசாரணை நடத்தினால் மலைவிழுங்கி மகாராசன்கள் பற்றிய தகவல்கள் வெளியாகும் என்பது நிச்சயம்.

மாநகர சபையின் பெரிய திட்டங்களைத் தனியார் துறையினர் மூலம் செய்கின்றோம் என்ற பெயரில் வருவாயை அறவிட்டு, தனியார் துறையினர் செய்கின்றனர் என மாநகர சபை நிர்வாகத்துக்கும், மாநகா சபை செய்கின்றது என்று தனியார் துறைக்கும் காட்டி, இடை நடுவில் தனிப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மூலம் விடயங்களை ஒப்பேத்தி, ஒரு பக்கமும் கணக்குக் காட்டாமல் சாதிக்கும் சூத்து மாத்து அரங்கேறுவதாகப் பேச்சு.

கவுண்ட மணி – செந்தில் வாழைப்பழக் கணக்காக ‘அதுதான் இது’ என்று கயிறு விட வேண்டியதுதான் பாக்கி.

*“நாங்கள் நேர்மையான, ஊழல் – லஞ்சத்துக்கு இடம் கொடுக்காத இளைஞராகவே மணிவண்ணனைப் பார்த்தோம். ஆனால் அவர் Moneyவண்ணனாக அல்லவா இருக்கின்றார்...!”* – எனப் பொருமுகின்றார் அன்பர் ஒருவர்.

சபை கலைவதற்கு முன்னர் சுருட்டுவது லாபம் என்று அவர் கணக்குப் பண்ணி செயற்பட்டு வருகின்றார் என்பது நம் அன்பருக்குத் தெரியவில்லை. அவ்வளவுதான்...!

–மின்னல்–

---

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, நாட்டில் கடந்த மூன்று நாள்களாக 170 இற்கும் மேற்பட்ட மரணங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுவரும் நிலையில் உண்மையில் தற்போது நாட்டில் 200 இற்கும் அதிகமான கொரோனா மரணங்கள் பதிவாகி வரும் சந்தர்ப்பங்களே அதிகம் உள்ளன என்றும் அவா கூறியுள்ளார்.

அத்துடன், பெருமளவு கொரோனாத் தொற்றாளர்கள் தனிமைப்படுத்தப்படாமல் தற்போது சமூகத்தில் நடமாடி வருகின்றனர் என்றும் அவா நேற்று வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

## 3ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாவுகளின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 790 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 186 பேரில் 111 ஆண்களும், 75 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 03 ஆண்கள், பெண் ஒருவர் வயதுக்குட்பட்டவர். 17 ஆண்கள், 18 பெண்கள் என 35 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 147 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 91 ஆண்களும், 56 பெண்களும் அடங்குகின்றனர்.

---

## தொற்றாளருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்காக 1904 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ நோய் தாக்கம் அதிகரித்திருப்பின் (சுவாசிக்கச் சிரமம்) அந்த நோயாளர்கள் A இடைவெளி வயது இடைவெளி தேசிய அடையாள அட்டை இலக்கம் இடைவெளி விலாசம் என்பவற்றை குறிப்பிட்டு குறித்த இலக்கத்துக்குக் குறுந்தகவல் அனுப்ப முடியும்.

★ காய்ச்சல் மாத்திரம் ஏற்பட்டிருப்பின் அந்த நோயாளர்கள் B இடைவெளி வயது இடைவெளி தேசிய அடையாள அட்டை இலக்கம் இடைவெளி விலாசம் என்பவற்றை குறிப்பிட்டு 1904 என்ற இலக்கத்துக்குக் குறுந்தகவல் அனுப்ப முடியும்.

★ எவ்வித நோய் அறிகுறிகளும் தென்படாத நோயாளர்கள் C இடைவெள வயது இடைவெள தேசிய அடையாள அட்டை இலக்கம் இடைவெள விலாசம் என்பவற்றை குறிப்பிட்டு 1904 என்ற இலக்கத்துக்குக் குறுந்தகவல் அனுப்ப முடியும்.

இவ்வாறு கிடைக்கப்பெறும் குறுந்தகவல்கள் கொவிட் ஒழிப்பு தேசிய மத்திய நிலையத்தின் ஊடாக வைத்திய குழுக்களுக்கு அறிவிக்கப்படும்.

நோயாளர்கள் வழங்கும் தகவலுக்கு அமைய 247 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக அவர்களைத் தொடர்புகொண்டு சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக அம்புலன்ஸ் சேவை உள்ளிட்ட ஏனைய சிகிச்சை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர வீட்டில் தனிமைப்படுத்தப்படும் கொரோனா நோயாளர்களை வைத்திய குழுவினர் தொடர்ச்சியாகத் தொடர்புகொண்டு தேவையான சிகிச்சைகள் வழங்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 1390 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

---

## 29 வைத்தியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாதியர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் மூவர் உயிரிழந்துள்ளனர் எனவும் அகில இலங்கை தாதியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமின்றி, 37 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

---

## புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திப்பு பிற்போடப்பட்டமை தொடர்பாகவும், புதிய அரசமைப்பு தொடர்பாகவும் ஜனாதிபதிக்கு இரா.சம்பந்தன் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்திலே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கை அரசு ஐ.நாவுக்குப் பகிரங்கமாகவே பல வாக்குறுதிகளை வழங்கியது. இவையனைத்தும் பதிவு செய்யப்பட்ட விடயங்களாகும். அவை நிறைவேற்றப்பட வேண்டும்.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் 1988 இல் நிறைவேற்றப்பட்டது. அது போதாது எனக் கருதப்பபட்டது.

1988 இலிருந்து அடுத்தடுத்து வந்த ஒவ்வொரு அரசும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதோடு, காத்திரபூர்வமான அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்படுத்துமுகமாக 13 ஆவது திருத்ததின் மீது மேலும் கட்டியெழுப்புவதற்கும் இணங்கின.

இந்த நடைமுறைகளிலிருந்து பெருமளவு கருத்தொருமைப்பாடு பெறப்பட்டது. புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் நடைமுறை இனியும் தாமதிக்கப்படலாகாது.

1972 ஆம் ஆண்டு அரசமைப்பு, 1978ஆம் ஆண்டு அரசமைப்பு முறையே 2 வருடங்களுக்கும் ஒரு மாதத்துக்கும் குறைவான காலத்தையே எடுத்தன.

தற்போது நடைமுறை கடந்து 32 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது.

எனவே, இந்த நடைமுறை இனியும் தாமதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இரா.சம்பந்தன் இந்தக் கடிதத்தின் வாயிலாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நடந்துசென்று மாகாண எல்லைகளை கடப்பவர்களை கைது செய்ய ஏற்பாடு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

பஸ்களில் மாகாண எல்லைகளை அடைந்த பின்னர் பிற மாகாணங்களுக்கு நடந்து செல்லும் நபர்களை கைது செய்ய சிறப்பு பொலிஸ் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

சட்டத்தை மீறுபவர்கள், அதை ஆதரிக்கும் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

பொதுப் போக்குவரத்து சேவைகள் அல்லது அத்தியாவசிய சேவைகளைத் தவிர வேறு யாரும் மாகாண எல்லைகளைக் கடக்க முடியாது என்று அவர் மேலும் கூறினார்.

அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய மாகாண எல்லைகளில் சிறப்பு பொலிஸ் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன, சாலை தடுப்புகள் மற்றும் பாலங்கள் அனைத்தையும் உள்ளடக்கும் வகையில் பொலிஸ் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர்



கூறியுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிட்ட அவர் இதனைக் கூறியுள்ளார்.

# மங்கள விரைவில் குணமடைய அனைவரும் பிரார்த்திப்போமாக!

## டலஸ் அழகப்பெரும உருக்கம்

கொவிட் தொற்றுக்குள்ளாகி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர விரைவில் குணமடைய வேண்டும் என பிரார்த்திப்பதாக வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை நடபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

'இலங்கையில் புகழ் பெற்ற வெகுசன ஊடக அமைச்சராக செயற்பட்டுள்ள மங்கள சமவீர கொவிட் தொற்றுக்குள்ளாகி தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வருகின்றார். நாமனைவரும் ஒரு மனதுடன் அவர் விரைவில் குணமடைய வேண்டும் என பிரார்த்திப்போம்.' என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார்.

இன்றைய தினம் முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் பின்னர் அவர் இறந்துவிட்டார் எனவும் சமூக வலைத்தளங்களில் போலி செய்திகள் பகிரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கணவரும் மனைவியும் அடுத்தடுத்து மரணம்

## நீர்கொழும்பில் துயரம்

சமகால கொரோனாத் தொற்றால் ஒரு வார காலத்தில் கணவனும் மனைவியும் இறந்துள்ள துயரச் சம்பவம் கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பில் நடந்துள்ளது.

நடராஜா கருணாலிங்கம் (வயது 75) என்னும் மின்சார தொழில்நுட்பவியலாளர் கடந்த 11 ஆம் திகதி கொரோனாத் தொற்றால் மரணமடைந்ததையடுத்து, அவரது மனைவி ஜெயலக்ஷ்மி (வயது 75) கடந்த செவ்வாய்க்



கிழமை மரணமடைந்தார்.

இவர்களது ஒரு மகன் ஆஸ்திரேலியாவிலும் ஒரு மகள் இங்கிலாந்திலும் வசிக்கின்றனர்.

# குடும்பஸ்தரைக் கடத்த வவுனியாவில் முயற்சி

## பொலிஸார் அதிரடியாக முறியடிப்பு

கொடுக்கல் வாங்கல் பிணக்கின் காரணமாக வவுனியாவில் குடும்பஸ்தர் ஒருவரை வான் ஒன்றில் கடத்த மேற்கொண்ட முயற்சி பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் உள்ள குடும்பஸ்தர் ஒருவர் யாழில் உள்ள ஒருவரிடம் ஒரு தொகைப் பணத்தை கடனாக பெற்றிருந்தார். குறித்த பணம் இதுவரை செலுத்தப்படவில்லை.

இந்நிலையில் குடும்பஸ்தர் தனது மனைவி, பிள்ளைகளுடன் வவுனியா நகர் நோக்கி காலை ஓட்டோவில் சென்றிருந்தார்.

இதன்போது, வவுனியா, இலுப்பையடிச் சந்தியில் குடும்பஸ்தரை வழிமறித்த சில நபர்கள் அவரது மனைவியையும், பிள்ளையையும் அவ்விடத்தில் விட்டு விட்டு வெள்ளை வான் ஒன்றில் குடும்பஸ்தரை ஏற்றிச்சென்றுள்ளனர்.

இதன்போது வாகன இலக்கத்தை குறித்துக் கொண்ட மனைவி வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்போது விரைந்து செயற்பட்ட வவுனியா பொலிஸார் குறித்த வானையும், குடும்பஸ்தரையும், வானில் இருந்த ஆறு பேரையும் வவுனியா வெளிக்குளம் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

இதனையடுத்து வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு வாகனம் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொடுக்கல் வாங்கல் பிணக்கின் காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

# புறக்கோட்டை மூடப்படாது!

## பந்துல விடாப்பிடி



சுய விருப்பத்தின் அடிப்படையில் மூடப்படும் வர்த்தக நிலையங்களை பலவந்தமாக திறக்கும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. எக்காரணிகளுக்காகவும் புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையமும். புறக்கோட்டையும் மூடப்படாது.

ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தினால் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கும் இதன் பொறுப்பை அரசாங்கத்தால் ஏற்க முடியாது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஒரு தரப்பினர் குறைந்த மட்டத்தில்சிந்தித்து நாட்டை முழுமையாக முடக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறார்கள். நாட்டை முழுமையாக முடக்கும் தீர்மானத்தை எடுப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

தீர்மானம் எடுப்பதும் பெரிய விடயமல்ல, கொவிட் தாக்கத்திற்கு மத்தியில்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது என்பது தொடர்பில் அரசாங்கம் அதிகம் கவனம் செலுத்தியுள்ளது.

நாட்டை முழுமையாக முடக்கினால் உணவு உட்பட அத்தியாவசிய சேவை விநியோகத்தில் பாரிய பாதிப்பு ஏற்படும்.

அத்தியாவசிய சேவையை விரும்பினாலும், விரும்பாவிடினும் முன்னெடுத்துச் செல்ல நேரிடும். நாட்டை முடக்கினால் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படும். அதனால் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வடையும். இதன் பொறுப்பை அரசாங்கத்தால் ஏற்க முடியாது.

நேற்று வியாழக்கிழமை முதல் லங்கா சதொச விற்பனை நிறுவனத்தின் ஊடாக நிவாரணப் பொதிகளை இரண்டு வார காலத்துக்கு கட்டணமில்லாமல் வீடுகளுக்கு விநியோகிக்க எதிர்பார்த்துள்ளோம். – என்றார்.

# சாதாரண அறிகுறிகள் தென்படும்போது மக்கள் உதாசீனப்படுத்த வேண்டாம்

## விசேட வைத்திய நிபுணர் லால் பனாப்பிட்டி தெரிவிப்பு

சமூகத்திலிருந்து நேரடியாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் பெருமளவான தொற்றாளர்களே ஒட்சிசன் தேவையுடையோராகக் காணப்படுகின்றனர்.

தாம் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை அறிந்திருக்காமை அல்லது சாதாரண அறிகுறிகள் தென்படும் போது அவற்றை உதாசீனப்படுத்தல் என்பவையே இதற்கான பிரதான காரணியாகும்.

எனவே சிறிதளவில் அறிகுறிகளை உடையவர்கள் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும் என்று வைத்தியசேவைகள்தொடர்பான பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் லால் பனாப்பிட்டி தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்

மேல் மாகாணத்திலுள்ள பிரதான வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் தொற்றாளர்களில் 40 சதவீதமானோர் ஒட்சிசன் தேவையுடையவர்களாக உள்ளனர். இடைநிலை சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருவோர் இந்த சிக்கலுக்கு முகங்கொடுக்கவில்லை.

சமூகத்திலிருந்து நேரடியாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுபவர்களே இவ்வாறு ஒட்சிசன் தேவையுடையவர்களாகவுள்ளனர். இவ்வாறான தொற்றாளர்கள் சாதாரணமாக அறிகுறிகள் தென்படும்போது அதனைக் கவனத்தில் கொள்ளாமல் அன்றாட வேலைகளில் ஈடுபடுகின்றனர். சிலர் தாம் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளோம் என்பதை அறியாத நிலையிலும் இவ்வாறான பிரச்சினையை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறானவர்கள் உடலில் ஒட்சிசன் அளவு முற்றாகக் குறைவடையும் நிலையிலேயே வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர்.

அதன் காரணமாகவே தீவிர நிலைமையை அடையும் வீதமும் அதிகமாகக் காணப்படுகிறது. எனவே, தொற்றுக்கான சாதாரண அறிகுறிகள் தென்பட்டால் கூட உடனடியாக மருத்துவர் ஒருவரை நாடி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம். என்றார்.

# வெதுப்பகத்துக்கு விறகு வெட்டச் சென்ற மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு

விசுவமடு றெட்பானாவில் அமைந்துள்ள வெதுப்பகம் ஒன்றுக்கு கடந்த புதன்கிழமை காலை விறகு வெட்டச் சென்ற நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விசுவமடு வள்ளுவர்புரத்தைச் சேர்ந்து மூன்று பிள்ளைகளின் தந்தையான 41 வயதான சமரகோன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விறகு வெட்டிக்கொண்டிருந்த நிலையில், தேநீர் எடுத்துச் சென்ற போதே அவர் உயிரிழந்துள்ளமை தெரியவந்ததனையடுத்து புதுகுடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை புதுகுடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பிரதம நீதியரசரின் பதில் என்ன?

'கொவிட் – 19 பரவலின் பின்புலத்தில் நீதி பரிபாலனம்' என்ற சாரப்பட மேல்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதிவான்களுக்கு என நடத்தப்பட்ட மெய்நிகர் கருத்தரங்கு இலங்கையின் நீதித் துறையின் மீதான கண்ணியமற்ற, அப்பட்டமான தலையீடு என்று இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் கடுமையாக விமர்சித்திருந்தோம்.

இது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பிரதம நீதியரசர் போன்றோர் விசேட கவனம் எடுத்து நிலைமையைச் சீர் செய்ய – இலங்கையின் நீதி பரிபாலனத்தில் முறையற்ற விதத்தில் தலையீடு செய்வதை முறியடிக்க – முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தோம்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் காட்டமாகத் தனது கண்டனத்தையும் ஆட்சேபனையையும் முன்வைத்திருக்கின்றது.

ஜே.வி.பியின் தலைவரான அநுர குமார திஸநாயக்காவும் நாடாளுமன்றத்தில் காட்டமாகக் குரல் எழுப்பியிருக்கின்றார்.

இது விடயத்தில் தெரிந்தோ, தெரியாமலோ குற்றச்சாட்டு விரல் பிரதம நீதியரசர் மீதும் நீளுகின்றது.

அதனால்தான் போலும் எங்கள் சிரேஷ்ட சட்டத்தரணிகள் பலரின் ஆட்சேபனைக் குரல்கள் இது விடயத்தில் நாடாளுமன்றத்தில் இன்னும் வலுவாக – சத்தமாக – எழவில்லை.

இந்த அத்து மீறலுக்குப் பின்னர் நாடாளுமன்றம் ஒரேயொரு நாள்தான் கூடியது. அதனால் அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான அவகாசமும் வாய்ப்பும் கிட்டாமல் போயிருக்கலாம். நாடாளுமன்றத்தில் பேசினால் சிறப்புரிமை பாதுகாப்பு உண்டு. அதனையே அறிக்கையாக வெளியில் விட்டால், அல்லது வெளியே வெளிப்படையாகப் பேசினால் பிரதம நீதியரசரே நீதிமன்றுக்கு அழைத்து விளக்கம் கேட்கலாம் என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கின்றதோ தெரியவில்லை.

எனினும், நாடாளுமன்றுக்கு வெளியிலும் கூட அறிக்கை வெளியிட்டு, நீதிமன்றத்தின் சுதந்திரத்திலும் சுயாதீனத்திலும் தலையிடும் நடவடிக்கைக்கு எதிராகக் கண்டனத்தையும் ஆட்சேபத்தையும் தெரிவிக்க முடியும், இன்னும் அதற்குக் காலதாமதமாகிப் போய்விடவில்லை என்பதைச் சுட்ட விரும்புகின்றோம்.

இந்த மெய்நிகர் கருத்தரங்கில் நாட்டின் சகல நீதிபதிகளும், நீதிவான்களும் பங்குபற்ற வேண்டும் என அவர்கள் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளனர். கருத்தரங்கில் பங்குபற்றத் தவறின் சம்பள உயர்வு நிறுத்தப்படும், வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கான தெரிவுகள் மற்றும் பதவி உயர்களில் ஒதுக்கப்படுவீர்கள் என நீதிபதிகளும், நீதிவான்களும் எழுத்தில் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றனர்.

பிரதம நீதியரசரைத் தலைவராகக் கொண்ட நீதிச் சேவை ஆணைக்குழுவே இத்தகைய அச்சுறுத்தல் கடிதங்களை நீதிவான் மற்றும் நீதிபதிகளுக்கு அனுப்பி அவர்களைக் கட்டாயமாக இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ள வைத்திருக்கின்றது.

கொவிட் – 19 பரவுகையைக் கட்டுப்படுத்தும் விதத்தில் உரிய சட்டங்களை அரசு இன்னும் யாக்கவே இல்லை என்று இப்பத்தியில் மீண்டும் மீண்டும் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம்.

அந்தச் சட்டங்கள் இல்லாமல், கொவிட் 19 பரவுகையை ஒட்டிய காலங்களில் மக்கள் நடத்தும் போராட்டங்கள் தொடர்பான விடயங்களில் நீதிவான்கள், நீதிபதிகள் எப்படி உத்தரவிடவேண்டும், கட்டளை பிறப்பிக்க வேண்டும் என்ற வழிப்படுத்தல்கள் எல்லாம் மேலிடத்தில் இருந்து நீதிபதிகள் மற்றும் நீதிவான்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

அதாவது, நீதிவான்கள் மற்றும் நீதிபதிகள் எப்படித் தீர்ப்புச் சொல்ல வேண்டும் என்று மேலிடத்தில் அவர்களுக்குப் பாடம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி இது நீதித்துறைச் சுதந்திரத்தில் மிக மிக அப்பட்டமாக தலையீடு ஆகும்.


*"இதற்கும் எங்களுக்கும் தொடர்பே இல்லை"* – என்று அரசின் சார்பில் நீதியமைச்சர் அலி சப்றி தெரிவித்து விட்டார். மறுத்துள்ளார்.

*"அந்தக் கருத்தரங்கை நடத்தியது நீதிச் சேவை ஆணைக் குழு. அது சுயாதீனமானக் கட்டமைப்பு. அது எங்கள் வழிகாட்டலில் இயங்குவதல்ல. அப்படி நீதி முறைமைக்கு மாறான செயற்பாட்டில் நீதிச் சேவை ஆணைக்குழு ஈடுபட்டிருந்தால் அதனை அந்த சுதந்திர – சுயாதீன – அமைப்பிடம்தான் நீங்கள் போய்க் கேட்க வேண்டும். எங்களிடம் அல்ல"* – என்று விளக்கியிருக்கின்றார் நீதி அமைச்சர்.

அவர் கூறுவது உண்மை என்றால் இந்தக் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்க வேண்டியவர் பிரதம நீதியரசர்தான். அவரின் பதில் என்னவோ?

# மக்கள் மாத்திரமல்லர் அரசியல்வாதிகளும் பொறுப்புணர்வுடன் செயற்படுதல் வேண்டும்

## அரசை நம்பி பயனில்லை என எல்லே குணவங்ஸ தேரர் காட்டம்



கொவிட் தாக்கத்தால் நாட்டு மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான நிலையில் அரசியல்வாதிகள் கொழும்பில் இருந்து கொண்டு அரச வரப்பிரசாதங்களை அனுபவிக்காமல் தமக்குரிய பிரதேசங்களுக்குச் சென்று மக்களுக்கு தனிப்பட்ட முறையில் உதவி செய்ய வேண்டும். மக்கள் மாத்திரமல்லர் அரசியல்வாதிகளும் பொறுப்புடனும், விட்டுக் கொடுப்புடனும் செயற்பட வேண்டும்.

அரசாங்கம் பலவீனமடைந்துள்ளது. ஆலோசனை வழங்கி இனி பயனில்லை. வசதி படைத்தோர் இல்லாதவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என எல்லேகுணவங்ஸ தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொவிட் - 19 வைரஸ் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடு தொடர்பில் பல்வேறு தரப்பினரும் விமர்சிக்கிறார்கள். தவறுகளை திருத்திக் கொண்டு சிறந்த முறையில் பயணிக்க வேண்டும். என ஆட்சியாளர்களுக்கு பல முறை ஆலோசனை வழங்கியுள்ளோம். ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. அவர்கள் தங்களின் விருப்பத்தின் அடிப்படையில் செயற்படுகிறார்கள்.

ஆகவே இனி ஆலோசனை வழங்குவது பயனற்றது. கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நாட்டு மக்கள் பொறுப்புடனும், விட்டுக் கொடுப்புடனும் செயற்பட வேண்டும். என அரசியல்வாதிகள் குறிப்பிடுகிறார்கள். நாட்டு மக்கள் பலவற்றைத் தியாகம் செய்து விட்டார்கள். அரசியல்வாதிகளும் தியாகம் செய்ய வேண்டும்.

சுனாமி, யுத்தம் ஆகிய காலங்களில் நாட்டு மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டார்கள். தற்போதைய நிலையை ஓர் அனர்த்த நிலையாகக் கருதி செல்வம் உள்ளவர்கள் இல்லாதவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இனி வரும் காலத்திலாவது அனைவரது முகங்களிலும் மகிழ்ச்சி இருக்க ஒரு தீர்மானத்தை ஒன்றிணைந்து எடுப்போம். - என்றார்.

# 8 நிமிடங்களுக்கு ஒரு மரணம்! கொவிட்டால் இலங்கையில் பதிவு

நாடளாவிய ரீதியில் கடந்த 16 நாள்களில் 1,926 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொவிட் தொற்றால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையே இந்த எண்ணிக்கை காண்பிக்கின்றது.

இதற்கமைய கடந்த முதலாம் திகதி 63 மரணங்களும், 2ஆம் திகதி 74 மரணங்களும், 3 ஆம் திகதி 82 மரணங்களும், 4 ஆம் திகதி 94 மரணங்களும், 5 ஆம் திகதி 98 மரணங்களும், 6 ஆம் திகதி 98 மரணங்களும், 7 ஆம் திகதி 94 மரணங்களும், 8ஆம் திகதி 111 மரணங்களும், 9 ஆம் திகதி 118 மரணங்களும், 10 ஆம் திகதி 124 மரணங்களும், 11ஆம் திகதி 156 மரணங்களும், 12ஆம் திகதி 155 மரணங்களும், 13 ஆம் திகதி 160 மரணங்களும், 14ஆம் திகதி 161 மரணங்களும், 15 ஆம் திகதி 167 மரணங்களும், 16 ஆம் திகதி 171 மரணங்களும், 17 ஆம் திகதி 171 மரணங்களும் 18 ஆம் திகதி 170 மரணங்களும் பதிவாகியுள்ளன.

இதற்கமைவாக ஒரு மணித்தியாலத்துக்கு 7 கொவிட் மரணங்கள் பதிவாகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. 8 நிமிடத்துக்கு ஒரு மரணம் பதிவாகின்றது. இவ்வாறு மரணமடைந்தவர்களில் 1,482 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதேவேளை, 30 - 59 வயதுக்கு உட்பட்ட 430 பேரும், 30 வயதுக்கு குறைந்த 14 பேரும் மரணமடைந்துள்ளனர். கடந்த 16 நாள்களில் 1,101 ஆண்களும், 825 பெண்களும் கொவிட் தொற்றால் இதுவரை மரணமடைந்துள்ளனர்.

# உண்மையைக் கூற முயற்சித்தமையால் பறிபோனதா பவித்ராவிடமிருந்த அமைச்சு?

## விஜித ஹேரத் சபையில் கேள்வி



நாட்டின் சுகாதார நிலைமைகளின் உண்மைகளைக் கூற முயற்சித்தமையாலேயே சுகாதார அமைச்சு பவித்ரா வன்னியாராச்சியிடமிருந்து பறிக்கப்பட்டு ஆசிரியர்களை 'நாசமாய் போனவர்கள்' எனத் திட்டிய கெஹலிய ரம்புக்வெலவுக்கு வழங்கப்பட்டதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கொவிட் வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொவிட் வைரஸ் தொற்று பரவுவதற்கு நாட்டில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களே காரணம் என்று அரசு கூறுகின்றது.

நிதி அமைச்சராக பஸில் ராஜபக்ஷ பதவியேற்கும் போது நாடு முழுவதிலும் சந்திக்கு சந்தி மக்கள் ஒன்றுகூடி அதனைக் கொண்டாடினார்கள்.

அதேபோல் நாவலபிட்டியிலும் ஆளுங்கட்சியினர் பேரணிகளை முன்னெடுத்தனர். அரசின் இத்தகைய செயற்பாடுகளால் நாட்டில் கொவிட் பரவவில்லையா?

எனவே, கொவிட் பரவலுக்கு போராட்டங்கள் காரணம் எனக் கூற வேண்டாம். கொவிட் வைரஸ் பரவலைத் தடுப்பதற்குத் தேவையான சரியான தீர்மானங்களை அரசு எடுக்க வேண்டும்.

நியூசிலாந்தில் ஒரேயொரு கொவிட் வைரஸ் தொற்றாளர் இனங்காணப்பட்டதற்காக அந்த நாட்டுப் பிரதமர் நாட்டை முடக்கியுள்ளார்.

ஆனால் இலங்கையில் அரசு அமைச்சரவையை மாற்றம் செய்து கொண்டிருக்கின்றது. தனது அமைச்சு மாற்றத்தை பவித்ரா வன்னியாராச்சி அறிந்திருக்கவில்லை எனக் கூறினார்.

நாட்டின் சுகாதார நிலைமைகளின் உண்மைத்தன்மையை கூற முயற்சித்த பவித்ரா வன்னியாராச்சியை சுகாதார அமைச்சில் இருந்து விலக்கிவிட்டு, ஆசிரியர்களை 'நாசமாய் போனவர்கள்' எனத் திட்டிய கெஹலிய ரம்புக்வெலவை சுகாதார அமைச்சராக நியமித்திருக்கின்றார்கள்.

நாமல் ராஜபக்ஷவுக்கு மேலதிகமாக ஓர் அமைச்சுப் பதவியை வழங்க வேண்டும் என்பதற்காகவே இந்த அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

**அங்கம் -50**

**எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு**

**ந.வித்தியாதரன்**

*“இலங்கையில் தமிழ் ஊடகத்துறை வரலாற்றில் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத - ஞானச்செருக்கு மிக்க - ‘ராங்கிக்கார ஜென்டில்மேன்’ சிவநாயகத்தின் பெயர் என்றென்றும் நிலைத்திருக்கும்.”* - இது சிவநாயகம் ஐயா குறித்து மூத்த தமிழ் அறிவிப்பாளர் வி.என்.மதியழகன் முத்தாய்ப்பு வைக்கும் கருத்து.

ஞானச்செருக்கும் ஊடகத் திறமையும் அவரிடம் இருந்தன. அவற்றைத் தமது எழுத்தில் லாவகமாக அவர் பிரதிபலித்தார்; கையாண்டார்.

இப்போது இருக்கின்ற - எங்களைப் போன்ற பத்திரிகையாளர்கள் மாதிரி - அவர் தொலைக்காட்சியில் பார்க்கப்பட்டவரோ அல்லது வானொலியில் கேட்கப்பட்டவரோ அல்லர். அவர் அவற்றை விரும்பியவரோ அல்லது நாடியவரோ கூட அல்லர். அவர் வாசிக்கப்பட்டார். அவரது எழுத்து அப்படியே வாசகர்களை ஆகர்ஷித்தது; கவர்ந்தது.

அந்தக் காலகட்டத்தில் சிவநாயகம் ஐயாவின் எழுத்து தமிழ் மக்களின் உள்ளத்தே புகுந்து அவர்களைப் பற்றிப் பீடித்து நெறிப்படுத்தி, தமிழரசின் பால் வழிப்படுத்தியது.

அது எப்படி அமைந்திருக்கும் என்பதை அவரது ஊடகப் பண்ணையில் வளர்ந்த - பின்நாள்களில் எனக்கு ஒரு வழிகாட்டியாகவும் நண்பனாகவும் அமைந்த - மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் வாசகங்களின் ஊடு புரிய வைப்பது பொருத்தமானதாக இருக்கும் என நம்புகிறேன். இது, பொதுவாக ஒரு புத்தகத்தை பற்றிய - நூல் வடிவில் அமைந்த ஓர் ஆக்கத்தை பற்றிய - பொதுவான விவரணம் என்றாலும், எஸ்.டி. சிவநாயகம் ஐயாவின் கையூடே வெளிவந்த சுதந்திரன், பின்னர் தினபதி - சிந்தாமணி பத்திரிகைகளின் வாசகர்களுக்கும் சிவநாயகம் ஐயாவுக்கும் இடையில் இருந்த ஓர் ஊடக ஊடாட்டத்தையும் தெளிவுபடுத்தக் கூடிய ஒரு விளக்கமும் கூட.





இனி பாலா அண்ணனின் வார்த்தைகள் மூலம் அந்த விடயத்தை நோக்குவோம்:-

*“நூல்கள் அனைத்துமே உயிரற்ற சடப்பொருள்களாக, அச்சிடப்பட்ட கடதாசிப் பண்டங்களாகக் காட்சி தந்த போதும் அப்புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் ஏதோவொரு அதிசயமான இறவாப்பொருள் ஒளிந்து கிடக்கிறது. ஒவ்வொரு நூலிலும் ஒரு படைப்பாளியின் ஆன்மா குடிகொண்டிருக்கின்றது. அந்தப் படைப்பாளி மரணித்து பல ஆண்டுகள் கழிந்து இருக்கலாம். அல்லது பல நூற்றாண்டுகள் கழிந்து இருக்கலாம். ஆயினும் படைப்பாளியின் எண்ணங்கள், சிந்தனைகள், கருத்துக்கள், கோட்பாடுகள், அவன் ஆய்வுசெய்து கண்ட உண்மைகள், அவனது கண்டுபிடிப்புகள், வாழ்வனுபவத்திலிருந்து அவன் பெற்ற தரிசனங்கள் - எல்லாமே எழுத்து வடிவத்தில் நூலாக, அவனது வாழ்வின் சாட்சியாக, காலத்தால் சாகாத அவனது சிருஷ்டியாக, ஒரு மனிதத்தின் பேருண்மையாக அந்த நூலில் இருப்புக் கொண்டிருக்கின்றன.*

*“...... வாசிப்பில் வாசகனுக்கும் அந்த நூலைப் படைத்த படைப்பாளிக்கு மத்தியில் ஒரு விசித்திரமான உறவு நிகழ்கிறது. மானசீகமான ஒரு சந்திப்பு நிகழ்கிறது. அகவயமான ஒரு சங்கமம் நிகழ்கிறது. படைப்பாளியின் எழுத்து உலகில், அவனது கருத்து உலகில், அவனது அனுபவக் களத்தில் பிரவேசிக்கும் வாசகன், படைப்பாளியுடன் இணைந்து ஒரு தேடுதலை நடத்துகிறான். அந்தத் தேடுதலில், அந்த விசாரணையில், படைப்பாளியின் தரிசனத்தை வாசகன் தரிசித்துக் கொள்கிறான். அவனது பார்வை இவனைப் பற்றிக் கொள்கிறது. கருத்துக்கள் கூடுவிட்டு கூடு பாயும் விந்தை நிகழ்கிறது”* - என்கிறார் பாலசிங்கம். சிவநாயகம் ஐயாவின் கருத்துகள் இப்படித்தான் வாசகர்களைப் பற்றிப் பீடித்து வசப்படுத்தின.

தாம் பத்திரிகைத் துறைக்குள் நுழைந்த காலகட்டத்திலேயே, தாம் முன்வைக்கும் கருத்துக்கள் மூலம் வாசகர்களை ஆகர்ஷித்து, கவர்ந்திழுத்து, தன் கருத்து வலைக்குள் தந்திரமாகச் சிக்க வைக்கும் அற்புத எழுத்துக்கலை மர்மம் - நுட்பம் - சிவநாயகம் ஐயாவிடம் இருந்தது.

அதைச் சரியாக அடையாளம் கண்டு, தமது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு மக்கள் மத்தியில் அத்திவாரம் போட உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டார் தந்தை செல்வநாயகம்.

1950 களின் முற்பகுதியில் தமிழரசுக்கட்சி தமிழர்கள் மத்தியில் குறுகிய காலத்தில் ஆழமாக கால் பதித்து நிலையாக இடம்பிடிக்கவும், அதுவரை நிலை பெற்றிருந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைப் பின்தள்ளி முன்னேறவும், காத்திரமாக பங்களித்தது தமிழரசுக் கட்சியின் பத்திரிகையான சுதந்திரன்.

முப்பதே வயது இளைஞரான சிவநாயகம் ஊடகத் துறைக்கான கொள்கை, கோட்பாடுகளைத் தாமே வகுத்து நிலைநிறுத்திக் கொண்டு அதன்படியே சுதந்திரனையும் தூக்கி நிறுத்தினார். தமிழரசுக் கட்சியின் கொள்கைக் கோட்பாடுகளை, தந்தை செல்வாவின் எண்ணங்களை, கட்சித் தலைவர்களின் சிந்தனைப் போக்கை பட்டிதொட்டியெல்லாம் எடுத்துச் சென்று, தமிழ் மக்களின் மனதில் ஆணித்தரமாக உரைத்து, உறைய வைத்தது சிவநாயகம் ஐயாவின் எழுத்து.

ஏறிய ஏணியை எட்டி உதைப்பதும், பிழையான தரப்புக்களை அரவணைத்துக் கெடுவதும், இன்றைய தமிழரசு தலைமை போல அன்றும் இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். தானே உருவாக்கிய வரலாற்று ஜாம்பவானைத் தானே இழக்கும் பரிதாபம் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு நேர்ந்தது.

எப்போதும் தனது மனசாட்சிக்கும், தான் நீதி, நியாயம் எனக் கருதும் எண்ணங்களுக்கும் மதிப்புக் கொடுக்கும் அந்த ‘ராங்கிக்கார ஜென்டில்மேன்’ சுதந்திரனை விட்டு விலகினார்.

சுதந்திரனில் அவர் வரைந்த ‘குயுக்தியார் கேள்வி - பதிலை’ அவருக்கு பின்னாள்களில் வந்த பலர் நிறைவு செய்ய முயன்றனராயினும் அவ்வளவு தூரம் சிவநாயகம் மாதிரி அதனை அவர்களால் வெற்றிகரமாகச் செய்ய முடியவில்லை.

தினபதி - சிந்தாமணியில் திரிஞானி கேள்வி - பதில், அத்தாணி மண்டபம் என்று மக்கள் மனம் கவர்ந்த - வாசகர்கள் தேடி வாசிக்கின்ற - பல பத்திகளை அவர் கையாண்டார். அவை பற்றித் தனித்தனி ஆய்வுகளே செய்யப்பட முடியும். அத்துணை ஆழம் மிக்க சமாச்சாரங்கள் அவற்றில் அடங்கி கிடக்கின்றன.

நான் சஞ்சீவிக்குப் பொறுப்பாசிரியராக இருந்த காலத்தில் - 1998, 1999, 2000 முற்பகுதியில் சிவநாயகம் ஐயாவின் கேள்வி - பதில் பகுதிகளை மனதில் வைத்துக்கொண்டு ‘வித்துவான் கேள்வி - பதில்’ என்று ஒரு பகுதியை முன்னெடுத்தேன். வாராந்தம் யாழ் குடாநாட்டு வாசகர்களைப் பற்றிப் பீடித்த ஒரு பகுதியாக - சஞ்சீவியை வாசகர்கள் எடுத்ததும் ‘வித்துவான் - கேள்வி பதில்’ பகுதியை தேடி வாசிக்கும் ஒரு நிலைமையை ஏற்படுத்த முடிந்தது. வாசகனை கவர்ந்ததில் - தேடித்தேடி வாசிக்க செய்ததில் - என்னவோ ‘வித்துவான் பதில்கள்’ அந்நேரத்தில் வெற்றிக் கொடி நாட்டியது என்பது உண்மைதான்.

ஓர் இலக்கை எட்டச் செய்வதில் - நோக்கத்தில் - கருத்துச் செறிவில் - சிவநாயகம் ஐயாவின் குயுக்தியார் பகுதி ஏணி வைத்தும் எட்டமுடியாத உச்சத்தில் அமைந்தது.

கவர்ச்சியும், பொழுதுபோக்கும், பொருத்தமற்ற ரசனை போக்கும் மிக்க வித்துவான் கேள்வி - பதில் மூலம் சமூகத்தில் எந்த மேம்பாட்டையும் எங்களால் ஏற்படுத்த முடியவில்லை. நாம் ஏற்படுத்த முயலவும் இல்லை - வாசிப்புத் தேடலை ஏற்படுத்தியமையைத் தவிர.

ஆனால் சிவநாயகம் ஐயா நடத்திய குயுக்தியார் கேள்வி - பதில் சுருக்கமாக, இறுக்கமாக, நறுக்குத் தெறித்தாற் போல, ஆழமான கருத்துகளை வாசகர்களின் மனதில் பதித்தன. தாம் சார்ந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கைக் கோட்பாடுகளை ஒவ்வொரு தமிழனினதும் மனதில் ஆழப் பதிப்பதாக அந்தப் பகுதி அமைந்தது.

இலங்கையின் தமிழ் ஊடகத்துறை வரலாற்றில் இது போன்ற பல கேள்வி - பதில் பகுதிகள் வெளியாகி உள்ளன. எனினும் எனக்குத் தெரிந்த அளவில் குயுக்தியார் கேள்வி - பதில் ஏற்படுத்திய சமூக மாற்றத்தையும், தாக்கத்தையும் பின்னர் வந்த அத்தகைய எந்த பத்தியும் ஏற்படுத்தவில்லை என்பேன். எனினும் சிவநாயகம் ஐயாவின் சமகாலப் பங்காளரான சிரித்திரன் சுந்தரின் மகுடியார் பதில்கள் ஹாஸ்ய வடிவத்தில் சமூகநீதியை ஆழமாக எடுத்துரைத்தது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

இந்த வரிசையில் சிவநாயகம் ஐயாவின் ஊடகத் துறை திறமைகளை அடுத்து வரும் நாள்களில் தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்.....)



# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 06 | விஞ்ஞானம் | அலகு 14

## எண் வகைகளும் எண் கோலங்களும்

* முழு எண்களிலிருந்து எண் வகைகளாக
    * இரட்டை எண்கள்
    * ஒற்றை எண்கள்
    * முதன்மை எண்கள்
    * சேர்த்தி எண்கள்
    * சதுர எண்கள்
    * முக்கோண எண்கள்

*** இரட்டை எண்கள், ஒற்றை எண்கள்**

ஓர் எண்ணை இரண்டால் வகுக்கும் போது அவ்வெண் ஆனது மீதியின்றி வகுபடுமாயின் அவ்வெண் இரட்டை எண் ஆகும்.
உதாரணம் : 58426, 15472, 6584, 148578, 5236, 7854

ஓர் எண்ணை இரண்டால் வகுக்கும் போது அவ்வெண் ஆனது ஒன்று மீதி பெறப்படுமாயின் அவ்வெண் ஒற்றை எண் ஆகும்.
உதாரணம் : 576485, 57489, 25479, 32145, 2465, 74859

*** முதன்மை எண்கள், சேர்த்தி எண்கள்**

| | |
|---|---|
| 2 = 1 × 2 | = 1, 2 |
| 3 = 1 × 3 | = 1, 3 |
| 4 = 1× 4 , 2 × 2 | = 1, 2, 4 |
| 5 = 1 × 5 | = 1, 5 |
| 6 = 1 × 6, 2 × 3 | = 1, 2, 3, 6 |
| 7 = 1 × 7 | = 1, 7 |
| 8 = 1 × 8, 2 × 4 | = 1, 2, 4, 8 |
| 9 = 1 × 9, 3 × 3 | = 1, 3, 9 |
| 10 = 1 × 10, 2 × 5 | = 1, 2, 5, 10 |
| 11 = 1 × 11 | = 1, 11 |
| 12 = 1 × 12, 2 × 6, 3 × 4 | = 1, 2, 3, 4, 6, 12 |
| 13 = 1 × 13 | = 1, 13 |
| 14 = 1 × 14, 2 × 7 | = 1, 2, 7, 14 |
| 15 = 1 × 15, 3 × 5 | = 1, 3, 5, 15 |
| 16 = 1 × 16, 2 × 8, 4 × 4 | = 1, 2, 4, 8, 16 |
| 17 = 1 × 17 | = 1, 17 |
| 18 = 1 × 18, 2 × 9, 3 × 6 | = 1, 2, 3, 6, 9, 18 |
| 19 = 1 × 19 | = 1, 19 |
| 20 = 1 × 20, 2 × 10, 4 × 5 | = 1, 2, 4, 5, 10, 20 |

முதன்மை எண் என்பது இரண்டு வேறுபட்ட காரணிகளை மட்டும் கொண்ட எண்கள் ஆகும்.
உதாரணம் : 2, 3, 5, 7, 11, 13, 17, 19

சேர்த்தி எண் என்பது இரண்டுக்கு மேற்பட்ட காரணிகள் கொண்ட எண்கள் ஆகும்.
உதாரணம் : 4, 6, 8, 9, 10, 12, 14, 15, 16, 18, 20

1) ஒன்று தொடக்கம் முப்பது வரையிலுள்ள எண்களை ஒற்றை எண், இரட்டை எண் என வேறுபடுத்துக?

..........................................................................................

2) மிகச் சிறிய முதன்மை எண் எது?

..........................................................................................

3) மிகச் சிறிய சேர்த்தி எண் எது?

..........................................................................................

4) 30, 25, 17, 19, 24, 11, 15, 20, 45, 49, 37, 40 தரப்பட்ட எண்களை முதன்மை எண், சேர்த்தி எண் என வேறுபடுத்துக?


..........................................................................................

5) முதன்மை எண்ணாகவும், சேர்த்தி எண்ணாகவும் அமையாத எண் எது?

..........................................................................................

**சதுர எண்கள்**

ஓர் எண்கோலத்திலுள்ள நிரைகளும் நிரல்களும் சமமெனில் அது சதுர எண்கோலம் ஆகும். இந்த எண்கோலத்தால் குறிக்கப்படும் எண் சதுர எண்ணாகும்.



முதலாவது சதுர எண் 1 ( 1 x 1 )


இரண்டாவது சதுர எண் 4 ( 2 x 2 )

மூன்றாவது சதுர எண் 9 ( 3 X 3 )

எனவே எட்டாவது சதுர எண் 64 ( 8 x 8 ) ஆகும்

n வது சதுர எண் $n^2$ ஆகும்.

**முக்கோணி எண்கள்**



1 3 6 10

ஓர் எண்கோலம் முக்கோணி வடிவில் அமைந்திருப்பின் அது முக்கோணி எண் கோலம் ஆகும். அவ்வாறான எண்கோலத்தால் குறிக்கப்படும் எண் முக்கோணி எண் ஆகும்.

முதலாவது முக்கோணி எண் = 1

இரண்டாவது முக்கோணி எண் = 1 + 2 = 3

மூன்றாவது முக்கோணி எண் = 1 + 2 + 3 = 6

ஏழாவது முக்கோணி எண் = 1+ 2 + 3 + 4 + 5 + 6 + 7 = 28

*** எண் கோலங்கள்**

2 இல் தொடங்கி இரட்டை எண்களை ஒழுங்கு முறையில் எழுதுவோம்.
2, 4, 6, 8, 10, 12, .......
இது 2 இல் ஆரம்பிக்கும் இரட்டை எண் கோலமாகும்.

1 இல் தொடங்கி ஒற்றை எண்களை ஒழுங்கு முறையில் எழுதுவோம்.
1, 3, 5, 7, 9, 11, ............
இது 1 இல் ஆரம்பிக்கும் ஒற்றை எண் கோலமாகும்.

9 இல் தொடங்கி சதுர எண்களை ஒழுங்கு முறையில் எழுதுவோம்.
9, 16, 25, 36, 49, 64, .............
இது 9 இல் ஆரம்பிக்கும் சதுர எண் கோலமாகும்.

1) 2, 8, 5, 10, 15, 14, 21, 25, 30, 36 தரப்பட்ட எண்களில் முக்கோணி எண்களை தேர்ந்தெடுத்து எழுதுக?

..........................................................................................

2) 5, 9, 14, 16, 20, 24, 25, 29, 32, 36 தரப்பட்ட எண்களில் சதுர எண்களை தேர்ந்தெடுத்து எழுதுக?

..........................................................................................

3) 6 வது சதுர எண் யாது?

..........................................................................................

4) 8 வது முக்கோண எண் யாது?

..........................................................................................

5) 7, 10, 13, 16, 19, ........... என்ற எண்கோலத்தில் 10வது உறுப்பு யாது?

..........................................................................................

6) 8, 12, 16, 20, 24, ........... என்ற எண்கோலத்தில் 12வது உறுப்பு யாது?

..........................................................................................

| எண்கள் | ஒற்றை எண்கள் | இரட்டை எண்கள் | முதன்மை எண்கள் | சேர்த்தி எண்கள் | சதுர எண்கள் | முக்கோணி எண்கள் |
|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | | |
| 12 | | | | | | |
| 15 | | | | | | |
| 17 | | | | | | |
| 21 | | | | | | |
| 25 | | | | | | |
| 29 | | | | | | |
| 30 | | | | | | |
| 33 | | | | | | |
| 36 | | | | | | |

**ஆக்கம் : திரு. சற்குணராசா செந்தூரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்**
**யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி சுதர்சினி விக்னமோகன்**
**விரிவுரையாளர்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

# காத்தான்குடியில் 90 பள்ளிவாசல்கள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டன



காத்தான்குடி சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதன் காரணமாக காத்தான்குடியில் கடந்த புதன்கிழமை முதல் மறு அறிவித்தல்வரை பிரதேசத்திலுள்ள 90 பள்ளிவாசல்களும் மூடப்பட்டுள்ளன.

பள்ளிவாசல்கள் மூடப்படவேண்டும் என காத்தான்குடி நகருக்கான கொவிட் - 19 தடுப்புச் செயலணி அறிவித்ததையடுத்து கடந்த புதன்கிழமை முதல் காத்தான்குடியிலுள்ள பள்ளிவாசல்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

தற்போது கொரோனா நிலைமை தொடர்பிலும் நாட்டில் வேகமாகப் பரவி வரும் 'டெல்டா' திரிவு தொடர்பிலும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம் பெற்ற முக்கிய அவசரக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாப் பரவல் நிலைமை மிகத்தீவிரமாக காணப்படுவதாலும் தற்போது நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருவதாலும் மரண வீதங்கள் அதிகரிப்பதாலும் சில இறுக்கமான தீர்மானங்களை அவசியம் கடைப்பிடிப்பதோடு பொது மக்கள் அவதானத்துடனும் சமூகப்பொறுப்புடனும் நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருமணம், வலீமா போன்ற சகல நிகழ்வுகளும் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்படல் வேண்டும்.

தேசிய, மாவட்ட கொரோனாத் தடுப்பு செயலணியின் தீர்மானங்களுக்கு அமைவாக புதன்கிழமை முதல் பள்ளிவாசல்களுக்கு தொழுகைக்காக பொது மக்கள் வருகின்றமை இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், மறு அறிவித்தல் வரை பள்ளிவாசல்கள் மூடப்படவேண்டும்.

புதன்கிழமை முதல் உணவகங்களில் உணவுகளைக் கொண்டு செல்வதற்கு மாத்திரம் அனுமதிக்கப்படுவதுடன் எக்காரணம் கொண்டும் எவரும் உள்ளிருந்து உணவருந்த அனு மதிக்க வேண்டாம் என்பன போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டு பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

# கொவிட் சடலங்களை ஒன்றாக டயர்களை வைத்து எரிக்க முடிவு

பாணந்துறை ஆதார வைத்தியசாலைகளில் கொவிட் தொற்றால் மரணித்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் குறித்த சடலங்களை ஒன்றாக இட்டு தகனம் செய்ய அவதானம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை நகர சபை தலைவர் நந்தன குணதிலக்க இதனைத் தெரிவித்துள்ளார். டயர்களை வைத்து விறகுகளால் சடலங்களைத் தகனம் செய்யக்கூடிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

தகனம் செய்வதற்காகத் தற்காலிகமாக தகனச்சாலைகளை வெளியே அமைப்பதற்கான திட்டங்கள் இருந்தாலும், உள்ளூர் அதிகாரிகள் அதற்காக அதிக பணத்தைச் செலவழிக்க வேண்டியிருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாணந்துறை நகர எல்லையில் ஒரே ஒரு தகனச்சாலை இருப்பதால், ஒரு நாளில் அதிகபட்சம் மூன்று சடலங்களை மாத்திரம் தான் எரிக்கலாம் என்பதால் கோரகான, மொறட்டுவ, வாதுவ உள்ளிட்ட சுற்றுப் பகுதிகளில் உள்ள தகனச்சாலைகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், நாளாந்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் தகனச்சாலையில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். பாணந்துறை வைத்தியசாலை பிணவறைக்கு 37 சடலங்கள் மாத்திரம் தான் கொள்ளளவு திறன் இருந்தாலும், தற்போது 50 இற்கு மேற்பட்ட கொவிட் தொற்றால் மரணித்தவர்களின் சடலங்கள் இருக்கின்றன என பாணந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | விஞ்ஞானம் | அலகு 13

### செயற்கைச் சூழலும் பசுமை எண்ணக்கருவும் விடைகள்

**அறுவடையின் பின்னரான தொழில்நுட்பம்**

1.பயிர்ச்செய்கையின் விளைச்சலை அறுவடை செய்தவுடன் தரத்தைப் பேணும் வகையில் அதனைச் சுத்தப்படுத்தி தரம்பிரித்து அடுக்கி வைத்தல். அறுவடையின் பின்னரான தொழில்நுட்பம் எனப்படும்.

2.விளைச்சலை அறுவடை செய்தல், விளைச்சலை ஒழுங்குபடுத்தல், போக்குவரத்து விற்பனை செய்தல்.

3.விஞ்ஞான முறைப்படி விளைச்சலை அறுவடை செய்தல் அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு போக்குவரத்துக்கு என்பன மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது.

4.உற்பத்தியில் பெரும்பகுதி நுகர்வுக்குப் பயன்படாது விரயமாகின்றது. உற்பத்தியாளருக்கும் விற்பனையாளருக்கும் கிடைக்கும் வருமானம் குறைவடைகிறது. உற்பத்திகளின் விலை அதிகரிக்கிறது.

**தொழில்முறை நடவடிக்கை**

1.உணவுச் சேர்மானங்கள் துப்புரவாக்கிகள், மருந்துப் பொருள்கள், தொற்று நீக்கிகள், அழகுசாதனப் பொருள்கள், நிறப்பூச்சுகள்

2.இரசாயனப் பொருள்களுள் பெரும்பாலானவை செயற்கையாகத் தொகுக்கப்பட்ட பதார்த்தங்கள். ஆகையால் அவற்றுள் சில சூழலுடன் கலக்கப்பட்ட பின்னர் நீண்டகாலம் வரை அதே விதத்திற் காணப்பட்டு தாவரங்களால் அகத்துறிஞ்சப்பட்டு உணவுச் சங்கிலியினூடாகப் பாய்ந்து செல்வதால் பணிகளுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் நுண்ணங்கிகளின் பரவலும் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் ஓமோன்களுக்கு எதிர்த்தாக்கத்தைக் காட்டுவதால் மனிதர்களின் உடலினுள் ஓமோன் சமநிலை குழப்பமடைவதுடன் சூழலின் சமநிலையும் பாதிப்படைகிறது.

3. 1-செயற்கைச் சுவையூட்டிகளுக்குப் பதிலாக இயற்கைச் சுவையூட்டிகளை வீட்டிலேயே தயாரித்துப் பயன்படுத்தல்.
   2.கிருமியொழிப்பதற்காக மஞ்சள், பெருங்காயம் போன்றவற்றைப் பயன்படுத்தல்.
   3.சருமத்துக்குச் சந்தையில் காணப்படும் புற்றுநோயை உண்டாக்கக் கூடிய இரசம் அடங்கிய செயற்கைப் பூச்சுகளுக்குப் பதிலாக இயற்கை மருத்துவகக் குணமுடைய உற்பத்திகளைப் பயன்படுத்தல்.

**கட்டட நிர்மாணிப்புகள்**

1.பச்சைவீட்டு வாயுக்களின் காலலைத் தடுக்கக்கூடிய அதன்பால் குறைந்தளவு பங்களிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் பசுமை கட்டடம் எனப்படும்.

2. 1. கட்டடச் சூழல் பச்சை நிறத்திலான தாவரங்களைக் கொண்டிருத்தல்.
   2. சுத்தமான காற்றோட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கதவுகளின் யன்னல்கள் காற்றோட்டத் துவாரங்கள் என்பவற்றைப் பொருத்துதல்.
   3. கழிவுப் பொருள்களின் அளவு குறைவானதாவிருக்கும் வகையில் பொருள்களை முகாமைத்துவம் செய்தல்.
   4. சக்தியை வினைத்திறனுடன் பயன்படுத்தும் வகையில் திட்டமிடல்.
   5. நீரை வினைத்திறனுடன் பயன்படுத்தல்.
   6. குறைந்தளவு இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்திக் கட்டியெழுபபுதல்
   7. குறைந்தளவு பராமரிப்புச் செலவு கொண்டிருக்கக்கூடிய பொருத்தமான வீட்டைத் திட்டமிடல்.
   8. இயற்கை ஒளி நன்கு கிடைக்கக்கூடிய வகையில் திட்டமிடுதல்.

**பசுமைப் போக்குவரத்து**

1. பச்சை வீட்டு வாயுக்களின் காலல் குறைந்தளவில் இருக்கக்கூடிய வகையில் போக்குவரத்து முறைகளின் மீது கவனம் செலுத்துதல்.

2. 1) காபனீரொட்சைட்டு- $Co_2$ 2) $No_2$

3. $No_2$

4. 1. தனிநபர் வாகனப் பயன்பாட்டைக் குறைத்தல்.
   2. எரிபொருள் விரயம் குறைவாகவுக்ள்ள எரிபொருள் பாவனையல்லாத வாகனங்களைப் பயன்படுத்தல்.
   3. கலப்பு வாகனங்களின் பாவனைக்கான வாய்ப்புக்களை அதிகரித்தலும்.
   4. சூரியக் கலங்கள் உலர் கலங்களைப் பயன்படுத்தி இயங்கும் வாகனப் பயன்பாட்டை மேம்படுத்தல்.
   5. ஆறுகள் ஓடைகள் நதிகளுடனான போக்குவரத்துக்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தல்.

5. உணவுப் பொருள் போக்குவரத்தின்போது பாரிய எரிபொருள் விரயம் ஏற்படுவதன் காரணமாக உணவு வழங்கல் தடவைகளைக் குறைத்தல் பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுகளுக்குப் பதிலாக உள்நாட்டு உணவுப் பயன்பாட்டுக்கு பழக்கப்படுத்திக்கொள்ளல்.

6.தனிநபரொருவரது நடவடிக்கைகளினூடாக ஆண்டொன்றில் வளிமண்டலத்துக்கு விடுவிக்கப்படும் காபனீரொட்சைட்டின் அளவு எவ்வளவு என்பது குறிப்பிடப்படுகிறது.

7.குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுதலை நீர் அடிச்சுவடு மூலம் குறிப்பிடப்படுகிறது.

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி) யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**

# எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து; விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல்

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து தொடர்பான விசாரணையை உடனடியாக முடிக்கவும், குற்றவாளிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்யவும் உள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கு கடந்த புதன்கிழமை கொழும்பு மேலதிக நீதிவான் லோச்சனி அபேவிக்ரம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சார்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி லக்மினி கிரிஹாகம நீதிமன்றத்தில் இந்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து சான்றுகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதங்களை ஆராய்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# அதிர்ஷ்ட இலாப போலி சீட்டுக்களை அச்சிட்டவர் பலாங்கொடையில் கைது

தேசிய லொத்தர் சபையால் வெளியிடப்படும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களைப் போன்று 11 போலிச் சீட்டுக்களை சட்டவிரோதமாக அச்சிட்ட ஒருவரைப் பலாங்கொடை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பலாங்கொடை நெல்லிவள பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து கடந்த 06 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டு சந்தைக்கு விற்பனைக்கு வந்த 3 வெற்றி இலக்கங்களை கொண்ட 11 அதிர்ஷ்ட இலாப சீட்டுக்களைப் பலாங்கொடை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சீட்டுக்கள், 2 ஆயிரம் ரூபா வெற்றி தொகைக்கு மேலதிகமாக பரிசு கிடைக்கும் வகையில் இலக்கங்கள் மாற்றப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன.

இதையடுத்து சந்தேகநபர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம்**

1. **கலைமாணி**
2. **வணிகமாணி**
3. **நடனமாணி**
4. **இசைமாணி**
5. **வியாபாரமுகாமைத்துவமாணி**

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்றை எதிர்வரும் **18.09.2021 (சனிக்கிழமை) காலை 9.00** மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் **02.09.2017 இற்கு பின்பும் 23.01.2021 திகதிக்கு முன்பும்** சித்தியடைந்த மாணவர்களுக்கே மேற்படி பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பட்டங்கள் வழங்கப்படவிருப்பதால், தகுதி உடையவர்கள் **03.09.2021(வெள்ளிக்கிழமை)** இற்கு முன்னதாக பூர்த்தி செய்யப்பட்ட வேண்டுகோள் படிவத்தினை **(Supplication Form)** திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வேண்டுகோள் படிவங்களை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் நேரடியாகவோ அல்லது எமது இணையத்தள முகவரியிலும் **(www.codl.jfn.ac.lk)** பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021 - 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

**பதிவாளர்**
18.08.2021



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 105

**305. பலில் சொன்னவை உண்மையாக நடந்தனவா என்று புலம்பெயர் சமூகத்தில் பரிசீலித்தீர்களா?**

நோர்வேயுடன் ஈடுபட்டிருந்த புலம்பெயர் அமைப்பாளர்கள்தான் அந்த முடிவுகளை விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசியோ அல்லது அவர்களது சர்வதேசப் பிரதிநிதியுடன் கதைத்தோ அதனை நோர்வேயின் ஈடுபாட்டாளர்களுக்கு தெரிவித்திருப்பார்கள். ஆகவே நாம் தொடர்பிலிருந்தவர்கள் மட்டுமே. ஏதோ நடப்பவற்றை அறிந்திருந்தோமே ஒழிய விவரங்களைத் தெரிந்து கொண்டவர்களாக இல்லை. ஆனால் இந்திய, நோர்வேத் தூதரக அதிகாரிகள் விடுதலைப் புலிகள், சரணடையவோ, வெளியேறவோ மறுத்து விட்டார்கள், ஆகவே உக்கிரமமான ஒரு போரைதான் எதிர்கொள்ளவேண்டி வரும் என விசனப்பட்டார்கள். முடிச்சு இப்படிதான் இருந்தது. ஸ்ரீலங்கா இன்று சொல்வதுபோல் தங்களது இறைமையைதான் அன்றும் முன்னிலைப்படுத்தியது. அதாவது விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை முறியடிப்பது தங்களது இராணுவத்தின் கடமை. ஆகவே அந்த இராணுவத்திடம்தான் சரணடைய முடியும். அந்த இறைமையை மீறி இன்னொரு இராணுவத்தின் முன்னோ அல்லது சர்வதேச படையின் முன்னிலையிலோ அதை செய்வதற்கு ஏற்க முடியாது என்பதுதான். அதற்கு மாற்றாக அவர்கள் வெளியேறும் திட்டம் நோர்வேயால் வைக்கப்பட்டது. அதில் யாரை முக்கியமாக வெளியேற்றுவது என்பதில் இந்தியாவின் நிர்ப்பந்தம் இருந்தது. மற்றவர்களில் யார், யார் என்பதும் தீர்மானிக்கப்பட இருந்தது. ஆனால் சரணடைபவர்களில் முக்கிய தலைவர்களை தவிர, மற்றவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாக, நோர்வே அதிகாரிகள் தெரிவித்தார்கள். அவர்கள் இன்னொரு விடயத்தையும் நாசூக்காக வெளிப்படுத்தினார்கள். யுத்த ரீதியில் அதுவும் சாதகமாக தெரிந்தது. இவ்வளவற்றையும் செய்ய ஸ்ரீலங்கா அரசாங்கம் முன்வருவதற்கு காரணம், அவர்களுக்குள் இருக்கும் மனப்பயமே. அவர்கள் வந்த சில தகவல்களை நம்பி, தாங்கள் எந்த நேரமும் தனிப்பட்ட ரீதியில் தாக்கப்படலாம் என்று பீதியில் இருக்கிறார்கள். அவைக்கு காரணம் 200 மேற்பட்ட தற்கொலை குண்டுதாரிகள் இயங்குவதற்கு உரிய நேரம் பார்த்து பதுங்கி இருக்கிறார்கள்(Sleeper Cells). இவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தை காலங்களிலேயே சிறிது சிறிதாக கொழும்பின் கேந்திர நிலையங்களையும் முக்கிய புள்ளிகளையும் கணக்கெடுத்து செயல்படுத்தி அனுப்பப்பட்டவர்கள். உத்தரவு கிடைத்ததும் தாக்குதல்கள் நடக்கும்.

ஆகவே, ஒரு பாரிய தாக்குதலின் கடைசி யுக்தியாக விடுதலைப் புலிகள் கொழும்பில் பாரிய அனர்த்தங்கள் விளைவிக்கலாம் என கணக்கெடுத்து, அதை தவிர்க்க முனைகிறது என்றும், விடுதலைப் புலிகள் அந்த மனோபயத்தை பாவிக்க உணர்வதாக தெரியவில்லை என்றார்கள். கடைசிவரை போராடுவோம்



என்பதைப் புத்தியீனமாக பார்த்தார்கள். அன்றிய கள நிலையில் விடுதலைப் புலிகள் புதுக்குடியிருப்பு, இரணைப்பாளை, புதுமாத்தலன் பகுதிகளில் நிலை கொண்டு நின்றார்கள். அவர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் பகுதிகளில் மக்கள் அடைபட்டிருந்தார்கள். அதற்கு அண்டைய



பகுதிகளில் மக்களை விரட்டி, விடுதலைப் புலிகளுக்கு பொறி வைப்பதற்காக ஸ்ரீலங்கா இராணுவம் பலத்த சேதங்களை நடத்தி முன்னேறிக் கொண்டிருந்தது. விடுதலைப் புலிகளினாலும் ஒரு எதிர்ச் சமர் செய்ய முடியும் என்ற கணக்கு இருந்ததால் மக்களை வெளியேற்ற வேண்டும் என்ற அக்கறையில் இந்த சரணாகதி அன்றில் வெளியேறுதல் என்ற பேச்சுக்கள் இடம்பெற்றன.

**306. இவற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங் காற்றல் எவ்வளவில் இருந்தது?**

தனித்தனியாக தங்களது விடுதலைப் புலிகளின் தொடர்புகளாலும் புலம்பெயர் அமைப்புக்களது கோரிக்கைகளிலும் தங்களால் முடிந்த பங்காற்றலை செய்திருப்பார்கள் என நம்புகிறேன். ஆனால் நானோ, என்னோடு அங்கு சென்ற குழுவினரோ, பாதிக்கப்பட்டு முகாம்களிலிருந்த மக்களின் தினசரி வாழ்வாதாரங்களுக்கு உதவிகள் செய்த காலங்களில் அவர்கள் மக்களை பொறுப்பெடுத்து அவர்களை ஏதும் சந்தித்து பாரிய வேலைத்திட்டங்களை அவர்களுக்காக செய்தனர் என நான் அறியவில்லை. புலிகளுக்கு ஆதரவாக இயங்கிய புலம்பெயர் அமைப்புக்களிடையே அப்பொழுது ஓர் அரசியல் இருந்தது. அவர்களது வேதனையானது மக்கள் விடுதலைப் புலிகளைக் கைவிட்டு அரசாங்கத்தை நம்பி வெளியேறி வந்தமையால் அவர்களது வாழ்வாதாரம் ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்தது, அவர்கள் பார்க்கட்டும் என்ற விதண்டாவாதம்தான் நான் சொல்லுவது.

மார்ச்சிலிருந்து, போர் முடிந்த மே மாத காலங்களில் நாங்கள் முகாம்களைத் தொடக்கத்தில் பார்க்கப்போன போது, தினமும் மக்களை வவுனியா மத்திய பள்ளிக் கூடத்திற்கு எந்த முகாம்களுக்கு அனுப்பப்படுவது என்ற தெரிவிற்காகக் கூட்டி வந்திருந்தார்கள். அவர்களில் இருந்த பெண்களுக்கு மாற்று உடுப்போ, பலருக்கு உள்ளாடைகள் கூட இருக்கவில்லை. அவர்களது கைகளில் எதுவுமே இல்லை - அவர்களது என்று சொல்லிக் கொள்வதற்கு. இவற்றிற்கெல்லாம் வெளிநாடுகளில் இருந்து துணி மணிகள் சேர்த்து அனுப்ப வாரங்கள் ஆகலாம் என்பதால் உடனடியாக அங்கிருந்தே, கொழும்பில் இருந்த கடைகளில் பெண்களுக்கான உடுபுடைவைகள் வாங்கி இதனை முடியக்கூடிய அளவில் விநியோகித்தோம். பின்னரும் அந்த மாதிரியான உதவிகள் தொடர்ந்தன.

ஆனால் தமிழ் தேசிய கூட்டணியினர் அவர்களுக்காக உதவிக் கரங்கள் நீட்ட ஒரு உந்துதலை தந்தார்கள் எனவோ முகாம்களை பார்வையிட்டனர் எனவோ நான் அறியவில்லை. இவற்றை மேலெடுக்காமல் விடயத்திற்கு வருவோம்.

கொழும்பு சென்றடைந்த நேரம் முதல் நான் எங்களது குழுவின் சார்பில் சம்பந்தனுடன் தொலைபேசியில் தொடர்பிலிருந்து, அவர் போர்ப் பகுதியில் விடுதலைப் புலிகளுடன் தொடர்பிலுள்ளாரா என்றும் எங்கள் நோக்கங்கள் பற்றி பரிமாறினேன். அந்த முயற்சிகளை அவர் வரவேற்றார். ஆனாலும் தான் நேரடித் தொடர்பில் இல்லை என்றும் எதுவும் மாவையின் ஊடாக தனக்கு தெரியப்படுத்தினால் மட்டுமே அறிந்து கொள்ளமுடியும், தற்சமயம் அங்கு தொலைபேசி வசதிகள் கஷ்டம் என்பதால் மாவை கூட எவ்வளவு தூரம் பேசமுடியுமோ தெரியாது எனக் கூறப்பட்டது. தினம் பல முறை அவருடன் பேசினேன். எங்கள் குழுவுடன் பேச்சுவார்த்தைகளின் முடிவில் அடுத்தநாள் எல்லா தூதுவர்களுடனும் அரச திணைக்கள அதிகாரிகள் (பேச்சுவார்த்தைகள் சம்பந்தப்பட்ட) சில முக்கிய அமைச்சர்கள், அரசாங்கத்துடன் இணைந்திருந்த டக்ளஸ், கருணா போன்ற தமிழ் உறுப்பினர்களும் விருந்தொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதிகாரிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் அந்த அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாகவும் ஆனால் அவர்களில் ஒருவரும் வருவது பற்றி தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்தனர். அவர்கள் பங்குபற்றினால் இதிலிருக்கும் எல்லோருடைய கருத்தாக்கங்களோடு பிரயோசனமான முன்னேற்பாடு ஏதாவது செய்யலாம் என்ற எதிர்பார்ப்பு தெரிந்தது. எங்கள் குழுவில் சிலர் டக்ளஸ், கருணா பிள்ளையான், சுரேஷ் எனத் தொடர்புகளில் இருந்தார்கள். அவர்களை அரசுக்கு அழுத்தம் கொடுக்க உந்தலாம் என நாங்கள் எங்களுக்குள் பேசிக் கொண்டோம். எவ்வளவோ முயற்சித்தும் சம்பந்தன் தான் பங்குபற்றப்போவதில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு பொது நிலைப்பாடு இல்லை என்றும், அது அவர்களது தனிப்பட்ட விருப்பம் என்றும், தான் மார்ச் 27ஆம் திகதி தமிழ்நாடு செல்வதாகவும் அங்கு தன்னைத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டார்.

அன்றைய விருந்தில் கூட்டமைப்பினர் பங்கு பற்றாதமையை ஒட்டி தூதரகங்கள் மத்தியிலும் அரச மட்டத்திலும் எழுந்து, சடை மாடையாக பேசப்பட்ட கருத்துக்கள் யாவுமே தமிழ் மக்களின் பிரதிநிதிகளான அவர்களுக்கு பெருமை சேர்க்கவில்லை. அந்த விருந்தில் இரு முக்கிய அமைச்சர்கள் நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு செய்தியை சொன்னார்கள்.

**307. அது என்ன தகவல்?**

ராஜபக்ஷக்கள் அமெரிக்க, இந்திய, பிரித்தானிய நோர்வே அரசாங்கங்களின் அழுத்தங்களினால் மக்களை கருத்தில் கொண்டு, ஏதோ ஒரு வழியில் விடுதலைப் புலிகளை சரணடைய வைத்தோ அல்லது நாட்டை விட்டு வெளியேற்றி விடும் வழிகளைதான் தேடுகிறார்கள். தாங்கள் அறிந்தவரையில் சில நேரடிப் பேச்சுக்களுக்கு நோர்வேயின் அனுசரணையில் சிங்கப்பூரில் கூட கோட்டாபய சந்திப்புக்கள் நடத்தினார் எனத் தகவல்கள். அவற்றை சாதகமாகத் தமிழ் மக்கள் பாவிக்கவேண்டும். இன்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்திருந்தால் இவை பற்றி பேசி, அவர்களும் உந்துதல்கள் தந்திருக்கலாம். அவர்களை பொதுமன்னிப்பில் தேசிய நீரோட்டத்திற்கு கொண்டு வர முயற்சிகள் செய்யலாம். தமிழ் தேசிய கூட்டணியினர் விடுதலைப் புலிகளின் ஆதரவில் நாடாளுமன்றம் வந்தவர்கள். ஆனால் இப்பொழுது அவர்களுக்கும் மக்களுக்கும் இருக்கும் இக்கட்டில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளாது விலகி ஓடுகிறார்கள்.

நோர்வேயும் விரக்தி அடைந்துள்ளது. அவர்களும் ஒன்றும் செய்ய முடியாவிட்டால் கோட்டாபய போர் முரசு தான் கொட்டுவார். அவர்கள் மஹிந்தாவை நோர்வே எடுத்த பேச்சுகளையும் அதன் பலாபலன்கள் பற்றியும் பேசி ஒரு இறுதி முடிவுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, தன்னோடு ஒரு பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார். அது மிக விரைவில் நடக்கும். அனேகமாக சர்வதேச தூதுவர்களையும் இணைக்க சாத்தியங்கள் வரலாம். அதை ஏற்று பேச்சுவார்த்தைக்கு போக சம்பந்தனுக்கு அழுத்தம் கொடுங்கள். மற்றவர்கள் ஊரில் இருந்து வருவது கடினம் என்றெல்லாம் சம்பந்தன் சொல்லுவார். ஆனால் சம்பந்தன் மட்டும் போனாலேயே சில வழிகள் ஏற்படும். அதை செய்யச் சொல்லவும் என்பதுதான்.

(வளரும்......)



# 22 கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

- வே.வரதசுந்தரம் -

**கேரளத்து இளைஞன்**
**கெங்காதரானந்தா**
**ஏத்தித் தொழுத**
**ஆச்சிநீ காளி!**
**சித்தன் அப்பாத்துரை**
**சித்துகள் காட்ட**
**வியந்தனை! வியந்தனை!**
**ஆச்சிநீ காளி!**
**தபோவனம் கண்ட**
**தவமகள் மாதாஜி**
**தவங்கண்டு மகிழ்ந்தனை**
**ஆச்சிநீ காளி!**

அடியார்கள் இறைவனிடம் பலவாறு வேண்டுதல் செய்வர். பொன்கேட்டது உண்டு. பெண் கேட்டதுண்டு. பதவி, செல்வம், சொத்து, சுகம், திருமணம், கல்வி, குழந்தைப் பாக்கியம், மோட்சம் கிட்டவேண்டும் என்றெல்லாம் வேண்டுதல் செய்துள்ளனர்.

ஆனால் அம்பாளிடம் வித்தியாசமான - புதுமையான - வேண்டுதலைச் செய்தார் ஒருபக்தை. இவ்வாறு, தனக்கு ஆன்மீக வழிகாட்டலுக்காக நல்ல குருவைத் தரும்படி கோணமலைக் காளி ஆச்சியிடம் வேண்டுதல் செய்த பக்தை திருகோணமலை மண்ணின் மங்கை அம்பாள் பக்தை திருமதி கௌரி மனோகரி விமலநாதன். திருகோணமலை ஐயனார் கேணியில் வாழ்ந்த இவர் துணைவர், அவர்தம் பெற்றோர் பல சந்ததிகளாகக் கோணமலை காளி ஆச்சி பக்தர்கள் என்பதை யானறிவேன்.

தனக்கு ஆன்மீக வழிகாட்டலுக்கு ஒரு நல்ல குரு. கிடைக்கவில்லையே என்பது இவரது நீண்டகால கவலையாக இருந்தது. தனது மூத்த சகோதரன்


சுவாமி கெங்காதரானந்தா

அருளாளர் ஜெயச்சந்திரனுக்கு திருவருட் சித்தத்தால் சுவாமி சிவானந்தரின் சீடர் சச்சிதானந்த யோகியார் குருவாக வாய்த்துள்ளார். இன்னொரு மூத்த சகோதரர் டாக்டர் இராமச்சந்திராவுக்கு திருகோணமலை சிவயோக சமாஜ நிறுவுநர் சுவாமி கெங்காதரானந்தா குருவாக வாய்த்துள்ளார். சமாஜ சமய, சமூகப் பணிகளில் அர்ப்பணத்துடன் முழுமையாக ஈடுபடுகிறார். பிறிதொரு சகோதரர் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் பாலசந்திரனுக்கு குருவாக சுவாமி கெங்காதரானந்தா மற்றும் குருமஹாராஜ் வாய்த்துள்ளனர். அவர் உருவாக்கிய ஆன்மீக ஸ்தாபனத்தின் கிளையை திருகோணமலையில நிறுவி ஆன்மீகப் பணிகளை இவர் ஆற்றுகின்றார்.

ஆனால், தன்னை ஆன்மிகத் துறையில் ஆற்றுப்படுத்த ஒருநல்ல குரு வாய்க்கவில்லை என்பது இவருக்கு நீண்டகால மனக்குறையாக இருந்தது. கோணமலை காளி ஆச்சி தனது வேண்டுதலுக்கு அருளிய


சுவாமிஜிபற்றிய நூலினை அம்பாள் ஆலய ஆதீனகர்த்தாவிடம் வழங்கும் கௌரிமனோகரி

அற்புதத்தை அவர் இதோ பகிர்ந்து கொள்கின்றார்:-

'ஆரம்பத்தில் நான் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் பக்தையாக இருந்தேன். வெள்ளிதோறும் தவறாது மதியம் பத்திரகாளி அம்பாளின் பூசைக்குப் போய் பிரசாதம் வாங்கிய பின்தான் வீடு திரும்புவேன். பங்குனி மாதம் அம்பாளின் திருவிழா உற்சவ காலங்களில் காலையிலும், மாலையிலும் பத்திரகாளி கோயில்போய் அம்பாள் வெளிவீதி வர வாசலில் நின்று அம்பாள், பிள்ளையார் முருகனை வணங்கும் போது, ஐயா அவர்கள் பூக்களை எறியும்போது ஏந்திப் பிடித்து வணங்குவேன். இப்படி ஒவ்வொரு வருடமும் செய்வேன். மூதூரில் இருந்து திருகோணமலைக்கு வந்ததும் 1981 ஆம் ஆண்டுதொட்டு எவ்வித தடையுமின்றி மிக்க பக்தியுடன், சந்தோசத்துடன் தேரிழுத்து வந்தேன்.

அம்பாள் கோயில் வீதியில் சுற்றிவரும்போது 'அம்பாள் ஆச்சித்தாயே! எனக்கு ஒருகுருநாதரைத் தாருங்கள்.' என்று வேண்டுதல் செய்வேன்.

ஈற்றில் அம்பாள் அருளால் சுவாமி கெங்காதரானந்தா எங்களுக்கு குருவாக வாய்த்தார். 1988 ஆம் ஆண்டு தைமாதம் வழமைபோல் அம்பாள் கோயிலில் கும்பிடும்போது, ஆதிமூலம் திறக்கப்பட்டு ஐயர் தீபம் காட்ட அம்பாள் இருக்குமிடத்தில் எங்கள் சுவாமிஜி கெங்காதரானந்தா இருக்கக் கண்டேன்.'

தனக்கு அம்பாள் சுவாமி கெங்காதரரை குருவாக அருளினார் என்று தான் அண்மையில் வெளியிட்ட நூலில் இந்த பக்தை கௌரிமனோகரி விமலநாதன் உறுதிபடக் கூறுகிறார். அந்நூலினை அவர் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தா வேதாகமாமணி பிரம்மஸ்ரீ ரவிச்சந்திர குருக்களிடம் கையளித்தார்.

கேரளத்து மண்ணின் மைந்தனான கெங்காதரானந்தா பாடல்பெற்ற ஸ்தலமாம் திருக்கோணேஸ்வரத்தில் துறவுபூண்டார். எந்தன் இளமைக் காலத்தில், இந்துக் கல்லூரியில் மாணவனாகப் பயின்ற ஐம்பதுகளின் பிற்பகுதியில் சுவாமி கெங்காதரானந்தாஜியின் மத்திய வீதியில் இருந்த - ஆன்மீக அலைகள் பூத்துக் குலுங்கிய - சுவாமியின் குடிலில் நாள்தோறும் சென்று யோகாசனம் பயிலவும், பூசைமுகத்தில் சுவாமிஜியின் திருவடிகளில் அட்டாங்க நமஸ்காரம் செய்து வழிபட்டு உய்யவும் பாக்கியம், முற்பிறவிப் பயன் பெற்றிருந்தேன்.

சுவாமிஜி அன்று தினமும் என்பால் சொரிந்த கருணைமிக்க ஆசியினால் அன்றுயான் முகங்கொடுத்த சொல்லொணாத் துயரங்கள், தந்தையை இழந்தமை, படிப்பினைத் தொடரமுடியாமை, தொழில் வாய்ப்பின்மை, கூட்டுக் குடும்ப பொறுப்புகள் - யாவும் கதிரவன் ஒளிபட்ட பனிபோல் நீங்கின.

'சுவாமிஜி! நின் தூயதிருப்பாதங்களுக்குப் போற்றி! போற்றி!' என்பேன்.

சுவாமி கெங்காதரானந்தா காளி ஆச்சிமீது பாடிய பாடல்களில் அம்பாள் மாட்சி, அற்புதம் கூறுகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக அப்பாடல்களில் உருக்கம் காணப்படுகிறது. இப்போது சுவாமி கெங்காதரானந்தா அவர்கள் அம்பாள் புகழ்பாடக் கேட்போம்:-

**அடித்தாலும் வதைத்தாலும் உன்காலடியை**
**விடமாட்டேன்**
**அடிவைத்து அடியளந்து வருங்கால் கருணைக்கண்**
**விழித்தருள்வாய்!**
**நீலக்கடல் பார்த்த வண்ணம் வீற்றிருக்கும்**
**மலையாளே**

**நீலவர்ண மேனியாளின் அழகல்லோ பேரழகு!**
**என்வினை என்னைச் சூழ்ந்து நிற்கும் வேளை**
**உன்திருவடியே தஞ்சமென்று சிரந்தாழ்த்தி**
**நிற்பேனம்மா!**
**பேரும்வேண்டாம் புகழும் வேண்டாம் மனம்நிறைந்த**
**வாழ்வே போதும்!**

---

# மட்டக்களப்பில் இரத்தத்துக்கு பாரிய தட்டுப்பாடு இரத்ததானம் வழங்க முன்வருமாறு கோரிக்கை

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பாளர் வைத்தியர் கந்தசாமி கிருஷானந்த் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனவே இரத்தத்தைத் தானமாக வழங்கப் பொதுமக்கள் முன்வருமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி. சந்திரகாந்தனின் பிறந்த தினமான கடந்த புதன்கிழமை அதனை முன் னிட்டு இரத்த தானம் வழங்கும் நிகழ்வு கட்சி காரியா லயத்தில் இடம்பெற்றிருந்தது.

இதில் வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரே ஒரு போதனா வைத்தியசாலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஆகும். இங்கு பொலன்னறுவை தொடக்கம் அம்பாறை பொத்துவில் வரையிலான அதிகளவான நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

இந்த நிலையில் நாள் ஒன்றுக்கு 30 தொடக்கம் 35 பைன் இரத்தம் தேவைப்படுகின்றது. அதேவேளை எமது பிரிவின் கீழ் உள்ள களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை, காத்தான்குடி ஆதார வைத்தியசாலை, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைகளுக்கு எமது பிரிவின் ஊடாக இரத்தம் வழங்கப்படுகின்றது.

அதேவேளை சிறுவர்களுக்கு ஏற்படும் களிசினியா நோய் நோயாளர்கள் அதிகளவானோர் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்த நோயாளர்களுக்கு ஒரு மாதத்திற்கோ அல்லது இரு வாரங்களுக்கு ஒருமுறை இரத்தம் ஏற்ற வேண்டி உள்ளதுடன், விபத்தில் ஏற்படும் இரத்த இழப்பு மற்றும் சத்திரசிகிச்சை ஏற்படும்போது போன்ற பல்வேறு காரணங்களுக்கு இரத்தம் தேவைப்படுகின்றது. இருந்தபோதும் தற்போது கொவிட் காரணமாக இரத்தம் பெறுவது மிகவும் கஷ்டமாக இருக்கின்றது.

எனவே 18 வயதுக்கும் 58 வயதுக்கும் இடையிலுள்ள சுகதேகியான பொதுமக்கள் இரத்தத்தை நன்கொடை வழங்குபவர்கள் வைத்தியசாலைக்கு நேரடியாக வந்து இரத்தத்தை வழங்குங்கள் அல்லது இரத்தத்தை வழங்கக் கூடிய முகாம்களை ஒழுங்கு செய்து தருமாறு அழைப்பு விடுக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# குறைந்தபட்சம் 3 வாரங்களுக்கு நாட்டை முற்றாக முடக்குங்கள்!

## ஜனாதிபதிக்கு அரசின் 10 பங்காளிக் கட்சிகள் அவசரக் கடிதம்

கொரோனா வைரஸ் தொற்று நோய் நெருக்கடியைக் கட்டுப்படுத்தும் வகையில் நாட்டைக் குறைந்தது மூன்று வாரங்களுக்கு முற்றாக முடக்குமாறு அரசில் அங்கம் வகிக்கும் 10 பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் எழுத்து மூலமாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறைந்தபட்சம் 3 வாரங்களுக்கு நாட்டை மூடாவிட்டால் கொரோனாத் தொற்று நோயாளர் தொகை அதிகரிப்பதுடன், வைத்தியசாலைகள் பராமரிப்புத் திறனை முற்றாக இழந்துவிடும் எனவும் 10 கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

நாடு தொடர்ந்தும் திறந்திருந்தால் நாட்டின் செயல் திறன் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது எனவும் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொரோனா நோயைக் கட்டுப்படுத்துவதன்மூலம், மக்களின்நம்பிக்கையை மேம்படுத்தி நாட்டின் பொருளாதார செயற்பாட்டையும் மேம்படுத்த முடியும் எனவும் அரசின் 10 பங்காளிக் கட்சிகளும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

எங்கள் மக்கள் சக்தி கட்சியின் அத்துரலிய ரத்தன தேரர், ஜனநாயக இடதுசாரி முன்னணி தலைவர் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸ, புதிய ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில, தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா, எக்சத் மஹஜன பெரமுனவின் தலைவர் டிரான் அலஸ், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் வைத்தியர் ஜீ.வீரசிங்க, ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் அசங்க நவரத்ன மற்றும் யுத்துகம தேசிய அமைப்பின் கெவிந்து குமாரதுங்க ஆகியோர் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.



# இன்று நள்ளிரவுடன் முடங்குகின்றது நாடு?

இலங்கையில் தற்போது டெல்டா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருவதன் காரணமாகவும், மருத்துவமனைகளில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் இன்று நள்ளிரவு முதல் இரண்டு வாரங்களுக்குப் பொது முடக்கத்தை அமுல்படுத்த அரசு தீர்மானித்துள் எது என அறியமுடிகின்றது.

சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைகளுக்கு அமைவாக இன்று நள்ளிரவு முதல் நாட்டை முடக்குவதற்கு ஜனாதிபதியால் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும்,

பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரியவருகின்றது.

கொரோனா வைரஸ் பரவல் நிலைமை தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் சுகாதார அமைச்சர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் அவசர சந்திப்பு இடம்பெறவுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய கொரோனா நிலைமைக்கு மத்தியில் நாட்டை மூன்று வாரங்களுக்காவது முடக்க வேண்டும் என்று ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஏனைய 10 பங்காளிக் கட்சிகள் ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தப் பின்னணியில் நாளை நள்ளிரவு முதல் நாட்டை இரு வாரங்களுக்கு முழுமையாக முடக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என வும் அரசின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த காலப்பகுதியில் சுகாதாரப் பிரிவினர் உள்ளிட்ட அத்தியாவசிய சேவையாளர்களுக்கு மாத்திரம் பயணிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.



# இராணுவத்தின் நடமாடும் தடுப்பூசி யாழில் ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை இராணுவத்தின் வைத்தியப் பிரிவால் நடமாடும் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாடு பூராகவும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடமாடும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் குறித்த வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் 512 ஆவது படைப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வீடுகளுக்குச் சென்று கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு, யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் சுகாதாரப் பிரிவினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பருத்தித்துறையில் விபத்தில் சிக்கி பெண்ணொருவர் காயம்

யாழ்., வடமராட்சி, பருத்தித்துறை - முதலாம் கட்டைச் சந்தியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் சிக்கிப் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார்.

பருத்தித்துறை நகர் பக்கமாக இருந்து மோட்டார் சைக்கிளில் வந்த பெண் தம்பசிட்டி வீதியில் திரும்ப முற்பட்ட போது பருத்தித்துறை நோக்கி வந்த வான் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற பெண் காயத்துக்குள்ளாகியுள்ளார். அவர் உடனே பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# தப்பியோடிய தொற்றாளர் காலியில் சடலமாக மீட்பு!

வைத்தியசாலையில் இருந்து தப்பியோடிய கொரோனாத் தொற்றாளர் ஒருவர் வீதியோரத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காலி - பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபரே நேற்றுமுன்தினம் மாலை இவ்வாறு தப்பியோடியுள்ளார்.

பின்னர், சுகாதாரப் பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து குறித்த நபரைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த நபர் மாதம்பே பிரதேசத்திலுள்ள ரயில் கடவைக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# முழுமையான முடக்கம் வேண்டி மகாநாயக்க தேரர்களும் கடிதம்

கொழும்பு, ஓகஸ்ட் 20

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் தீவிரமடைந்து வருவதால் நாட்டை ஒருவார காலத்துக்காவது முடக்க நடவடிக்கை எடுக்குமாறு மல்வத்து மற்றும் அஸ்கிரிய பௌத்த பீடங்களின் மகாநாயக்கதேரர்கள் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

அந்தப் பீடங்களின் மகாநாயக்க தேரர்களால் இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் நேற்று இது தொடர்பில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றால் முழு நாட்டு மக்களும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதால் அவர்களைப் பாதுகாப்பதற்காக விசேட மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளுக்கமைய குறைந்தது ஒரு வாரத்துக்காவது நாட்டை முடக்குமாறு மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி, பிரதமரை அந்தக் கடிதத்தின் மூலம் வலியுறுத்தியுள்ளனர்.

# பேக்கரி உணவுப் பொருள்களின் விலைகள் திங்கள் முதல் உயர்வு

கொழும்பு, ஓகஸ்ட் 20

பாண் உட்பட பேக்கரி உணவுப் பொருள்களின் விலைகளை அதிகரிக்க பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன என்று குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

பாண் இறாத்தல் ஒன்றின் விலையை 5 ரூபாவாலும், ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையை 10 ரூபாவாலும் அதிகரிக்கத் தாம் தீர்மானித்துள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அதேபோன்று, ஒரு கிலோ கிராம் கேக்கின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்படுகின்றது எனவும் பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

# 229 பேர் சிக்கினர்

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய மேலும் 229 பேர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 55 ஆயிரத்து 402 ஆக உயர்வடைந்துள்ளது.

இவர்களில் 52 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 2 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# நாட்டை உடன் முடக்குங்கள்! ஆதிவாசி தலைவர் கோரிக்கை

நாட்டை உடன் முடக்குமாறு ஆதிவாசித் தலைவர் ஊருவரிகே வன்னிலா எத்தோ கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கத்திடம் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு தேன் பூஜை செய்ததன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

எசல பெரஹரா காலத்தில் வழமையாக ஆதிவாசிகள் இவ்வாறு தேன் பூஜை செய்வது வழக்கமாகும்.

கொவிட் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் நாட்டை முடக்க வேண்டுமென அவர் வலிறுயுறுத்தியுள்ளார்.

எவ்வாறெனினும், கொவிட் பெருந்தொற்று கட்டுப்பாட்டை அரசாங்கத்திடமோ சுகாதாரத் தரப்பினரிடமோ ஒப்படைத்துவிட்டு மக்கள் வேடிக்கை பார்க்காது சுகாதார வழிகாட்டல்களை மக்கள் பின்பற்ற வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

# தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிரணி தலைவி மரணம்

*தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணித் தலைவியும் முன்னாள் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினருமான செல்வி மனோகர் கடந்த புதன்கிழமை அதிகாலை காலமானார் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தவர் கொழும்பு மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த நிலையில் புதன் அதிகாலை உயிரிழந்துள்ளார்.*

*மட்டக்களப்பு கல்லடி,உப்போடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணித் தலைவியாக நீண்டகாலமாக அரசியல் பணியாற்றி வந்தவராவார்.*

*தமிழ் மக்களின் மகளிர் அணியைக் கட்டியமைப்பதில் பாரிய பங்காற்றியவராகவும் இவர் இருந்துள்ளார். அவரது இறுதிச் சடங்கு தொடர்பான விவரங்கள் இன்னும் அறியக்கிடைக்கவில்லை.*

# பிறந்து 5 நாள்களான சிசுவின் தாய் கொரோனாவினால் உயிரிழப்பு

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் கம்பஹா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பிறந்து ஐந்து நாள்களேயான சிசுவின் தாய் சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

33 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று கம்பஹா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சமன் பதிரண ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தெல்கொட பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த பெண் கடந்த 11ஆம் திகதி பிரசவத்துக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதன்போது அவருக்கு காய்ச்சல், இருமல், தடிமன் இருந்ததால் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் அவரது நிலைமை கவலைக்கிடமாக இருந்ததால் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு சிசு பிரசவிக்கப்பட்டது.

இந்நிலையில், அவருக்குத் தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் ஐந்து நாள்களுக்குப் பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். சிசுவுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. – என்றார்.

# இலங்கையிலிருந்து சென்ற சீனப் பிரஜைக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் பணியாற்றிவிட்டு சீனாவிற்கு நாடு திரும்பிய சீனப்பிரஜையொருவருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

குறித்த சீனப் பிரஜை, ஷங்காய்க்கு சென்றிருந்த போது நடத்தப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி ஷங்காய் புடோங் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாகக் குறித்த சீனப் பிரஜை இலங்கையிலிருந்து சீனா சென்றுள்ளார். வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய ஐந்து சீனப் பிரஜைகளுக்கு இவ்வாறு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

மாலைதீவு, ஜமைக்கா, ஜப்பான், நைஜீரியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து சீனா திரும்பியவர்கள் இவ்வாறு கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# எஸ்டர் தாக்குதல்; வத்திக்கான் அவதானம்

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் வத்திக்கான் உன்னிப்பாக அவதானித்து வருவதாக அருட்தந்தை காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் சட்டமா அதிபர் தப்புல லிவேராவினால் கண்டறியப்பட்ட விடயங்கள் நாட்டு மக்களுக்கு அமுல்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரையில் எந்தவொரு நியாயமும் கிடைக்கப்பெறவில்லை எனவும், இதனால் சர்வதேச உதவியை பெற்றுக்கொள்ள நேரிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பான உண்மையான விடயங்கள் அம்பலமாவதாக இன்னமும் தென்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவால் செய்யப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

08



**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விவரம் :

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. முப்பொருள்களும் எவை?**

..........................................................................

**2. ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம், நாம் அறியோம், முழுதும் உண்மை ஆகிய மகா வாக்கியங்களுக்குச் சொந்தக்காரரான ஈழத்துச் சித்தர் யார்?**

..........................................................................

**3. வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரர் ஆலயத்தின் தேவியின் பெயர் என்ன?**

..........................................................................

**4. திருத்தொண்டர் புராணத்தைப் பாடியவர் யார்?**

..........................................................................

**5. ஈழத்துக் குமராலயங்களில் அபிஷேகக் கந்தன் அருளாட்சி செய்யும் ஆலயம் எது?**

..........................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

08

**பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-**

1. முழுப் பெயர் : ------------------------------------------------
2. பிறந்த திகதி : ------------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ------------------------------------------
4. பாடசாலை : --------------------------------------------------
5. முகவரி : ----------------------------------------------------

..........................................
கையொப்பம்

# மாணவர்களுக்குத் தடுப்பூசி வழங்காது பாடசாலைகளை திறப்பது ஆபத்தானது!



மக்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றுகை தொடர்பில் அரசாங்கத்தின் முனைப்பு பாராட்டுக்குரியது என ராகம போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் மக்களின் நடமாட்டம் ஓரளவு குறைந்துள்ளதாகவும் இது வரவேற்கப்பட வேண்டியது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயணக்கட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளும் பாராட்டப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் இந்த நிலைமையைத் தொடர்ந்தும் நீடிக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் கொவிட் தொற்றாளிகள் பதிவாகினாலும் மரணங்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமைக்கு 70 வீதமானோருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டமையே ஏதுவாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலும் வேகமாகத் தடுப்பூசி ஏற்றுவதன் மூலம் அவ்வாறான ஒரு நிலையை எட்ட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 12 வயதுக்கும் மேற்பட்ட பாடசாலை பிள்ளைகளுக்கும் கொவிட் தடுப்பூசி வழங்கியதன் பின்னர் பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும் எனவும், அதற்கு முன்னதாகத் திறந்தால் அது ஆபத்தானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடசாலைப் பிள்ளைகளுக்கு இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் வழங்கியதன் பின்னர் பாடசாலைகளைத் திறக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் சுகாதார வழிகாட்டல்களை சரியான முறையில் பின்பற்றினால் அடுத்த ஆண்டின் நடுப்பகுதியில் கொவிட்டை ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளார்.

# டெல்டா பிறழ்வுகளை அறிய சிறப்பு விசாரணை

இலங்கையில் காணப்படும் டெல்டா கொரோனா வைரஸ் மாறுபாட்டின் மூன்று பிறழ்வுகள் கொழும்பு மற்றும் பிற பகுதிகளுக்கு பரவியிருக்கிறதா என்பதை அறிய சிறப்பு விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் உயிரணு உயிரியல் பிரிவு மூலம் இந்த விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

விசாரணை நிறைவடைந்த பின்னர், விரிவான அறிக்கை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தனவிடம் ஒப்படைக்கப்படும்.

# உறங்கியது போதும் பிரதமரே எழும்புங்கள்!

## மனோ எம்.பி. அழைப்பு



கொவிட் தொற்றுக்கு எதிரான தடுப்பூசிகளை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் காட்டிய தாமதமே, தொற்று மற்றும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்த தம்மால் முடியாது என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டுள்ளதாலேயே, சுகாதார அமைச்சை முன்னாள் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் கையளித்திருப்பதாகவும், கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்காக எதிர்க்கட்சி என்ற வகையில் தாம் ஒத்துழைப்புக்களை வழங்கத் தயார் எனவும் தொடர்ந்தும் பிரதமர் உறக்கத்தில் இருக்காது, இனியாவது விழித்து நாட்டின் நன்மைகருதி சில முடிவுகளை மேற்கொள்ளவேண்டும் என்று மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார்.

# உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு சட்ட நடவடிக்கை

## ரமேஷ் பத்திரண உத்தரவாதம்

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

எவ்வாறிருப்பினும் இந்த விவகாரத்தில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இன்றி சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பை அரசாங்கம் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட தரப்பினரிடம் ஒப்படைத்துள்ளது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.08.2021 இல் வெளியிடப்பெற்றது.